1414

தொகுதி 11.] 1933ஆம் ஜனவரிமீ [பகுதி 12.

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
ஈ. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 7-பாகம் விலை ரூபா 13-14-0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

MADRAS

ஹேமவதி சீமாட்டியிடம் ராட்சஸ குப்பன் மேலும் கூறியதில், 'ஆனால் இன்றிரவு இங்கு நான் வந்திருக்க முடியாதபடி இங்கிருந்து இரண்டு மைலுக்கு அப்பால் மிதுனபுரியின் பக்கம் ஒரு கோர சம்பவம் நிகழ்ந்தது' என்று சொல்லி முடிக்கு முன்னர் சீமாட்டி, 'அது என்ன சம்பவம்,' என்று அதிக திக்பிரமையடைந்தவள்போல் கேட்டாள். அதற்கு அவன், 'அங்கு ஒரு இரட்டைக்கொலை நடந்தது' என்றான். அப்போது ஹேமவதி சீமாட்டி, 'இரட்டைக் கொலையா? நீ செய்தாயா என்ன?' என்று வினவவும், அவன், 'இல்லை. நானல்ல. நல்ல காலமாக நான் அல்ல என்று சொல்வதற்கு இரண்டு சாட்சிகளும் இருக்கிறார்கள். இல்லாவிட்டால் நான் அந்தப்பக்கம் சுற்றிக்கொண்டிருந்ததற்கு என்மீதும் பழி போட்டு விடுவார்கள்' என்றான். அதற்குச் சீமாட்டி, 'சாட்சிகளா, அதென்ன உன்னுடன் வேறு நண்பர்கள் இருவரை அழைத்து வந்தாயோ?' என்று கேட்கவும், அவன், 'இல்லை, இல்லை. அப்படியொன்று மில்லை. அந்த விவரமெல்லாம் பிறகு சொல்கிறேன்' என்று கூறினான். அச்சீமாட்டி, 'கொலை என்று சொன்னாயே, கொலை செய்யப்பட்டவர்கள் யார் என்பது உனக்குத் தெரியுமா?' என்று கேட்க, அவன், 'இருமாதர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்து கிடக்கிறார்கள். துப்பாக்கி வெடித்த சத்தத்தை நானும் கேட்டேன். என்னுடன் இருந்த இருவரும் கேட்டார்கள்' என்று சொன்னதும், சீமாட்டி, 'இது உன்வேலை அல்லவென்று நம்புவது கஷ்டமாய் இருக்கிறது. அந்த மாதர்களும் அவ்விடத்தில் நீ விட்டுவந்த ஆடவர்களும் யார் என்பது உனக்குத் தெரியுமல்லவா?' என்று கேட்டாள்.

அதற்கு ராட்சஸ குப்பன், 'சீமாட்டியே, நான் உன்னிடம் ஒரு சிறுவிவரம் சொல்லவேண்டியிருக்கிறது. அதைச்

186526

சொன்னபிறகு நான் எவ்வளவு நம்பிக்கைக்குப் பாத்திரமான வன் என்பது உனக்குத் தெரியவரும். ஆனால் அதற்கு முன் நான் உனக்கு இப்போது செய்யவேண்டிய வேலை என்ன? எதற்காக என்னை அழைத்தாய் என்பதைச் சொல்லி விடு' என்று கேட்டான், அப்போது ஹேமவதி சீமாட்டி, 'தற் சமயம் உன் ஊழியம் எனக்குத் தேவையில்லை. சந்தர்ப்பங் கள் மாறிவிட்டன. ஆயினும் நீ இங்கு வந்த சிரமத்துக்காக நான் உனக்கு ஏதேனும் தாராமற் போகமாட்டேன். இன் னும் இரண்டு மூன்று வாரத்துக்குள் உன் உதவி எனக்குத் தேவையாக இருக்கும், அப்போது உன்னை அழைக்கிறேன். இப்போது இந்த முடிப்பை எடுத்துக்கொள். நீ என்னிடம் சொல்லவேண்டிய விஷயத்தைச் சீக்கிரம் சொல்லிவிடு' என் றாள். அப்போது அவன், 'நான் சொல்லப்போகும் விஷ யத்தைக் கேட்ட பிறகு நீ இப்போது கொடுத்த பணத்தோடு இன்னும் சிறிது தொகையைக் கொடுக்க வேண்டும்,' என்று கூறியதற்கு அச்சீமாட்டி, அதிக பரபரப்புடன், 'விஷயத் தைச் சொல்லி முடி. நான் எவ்வளவு தாராளமாக நடந்து கொள்வேன் என்பது உனக்குத் தெரிந்த விஷயம் தானே,' என்று கூறியதும், குப்பன், 'அம்மா, இரண்டு தினங்களுக்கு முன் இருகனவான்கள் நடுக்குப்பத்திலுள்ள கோபாலன் தம் பதிகள் வீட்டில் என்னைச் சந்தித்துத் தங்கள் பெயர், செல்வ நாதர், மோகனதாஸ் என்றும் சொல்லிக் கொண்டார்கள்,' என்று சொன்னதும் ஹேமவதி சீமாட்டி திடுக்கிட்டு, 'ஆ! அவர்கள் வந்து உன்னை என்ன கேட்டார்கள். விரைவில் சங்கதியைச் சொல்' என்று ஆத்திரத்துடன் கேட்டாள். அப் போது ராட்சஸ குப்பன், 'நீ எனக்கு எழுதிய கடிதத்தை மிதுனபுரி தபாலாபீஸில் போஸ்ட் செய்யும்போது மோகன தாஸ் என்பவன் பார்த்துவிட்டானும். நீ யார் என்பதும் அவனுக்கு நன்கு தெரியுமாம். அவன் அப்போது என் வில

சத்தையும் பார்த்துக் கொண்டானும்' என்று சொல்லி முடிப் பதற்குள் ஹேமவதி சீமாட்டி திக்பிரமையும் ஆச்சர்யமும் அடைந்து, 'ஓ, அப்படி இருக்கவே முடியாது. நீதான் எனக் குத் துரோகம் செய்துவிட்டு இப்போது என்னை ஏமாற்றப் பார்க்கிறாய் என்று பிரமிப்புடன் சொன்னாள். அதற்காகச் சிறிதும் பயப்படாத குப்பன், 'அது உன்னுடைய அபிப்பி ராயமாயின் நான் இனிஉன்னுடன் பேசுவதே இல்லை, இதோ போய்விடுகிறேன்' என்றான். அதற்கு அவள், 'இல்லை, இல்லை. நீ போகக்கூடாது. நீ சொல்லவேண்டியதை யெல் லாம் சொல்லி முடி. நான் குறுக்கிடுவதில்லை' என்று கூறவே அவன் மேலும் சொல்லத் தொடங்கி, 'அவர்கள் இருவரும் சில முக்கிய காரணங்களை உத்தேசித்து நீ எனக்கு எழுதிய கடிதத்தில் இருக்கும் விஷயத்தைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அதில் விசேஷமாக ஒன்றுமில்லாமல் இருந் தமையால் நான் அதை அவர்களுக்குக் காண்பித்தேன்,' என் றதும் அவள் கோபத்துடனும் அச்சத்துடனும், 'ஐயையோ! காண்பித்துவிட்டாயா? அவர்கள் இப்போது என்ன சொல் கிறார்கள்' என்று பீதியுடன் கேட்டாள்.

அப்போது ராட்சஸ குப்பன், 'சீமாட்டியே, நான் உன் னுடைய நன்மைக்காகவே எல்லாம் செய்கிறேன் என்பதை நீ கவனிக்கவில்லையா? அவர்களுடைய அபிப்பிராயத்தை நன் ருகத் தெரிந்துகொள்ளுவதற்காக அவர்களை இழுத்துப் பார்த் தேன். நீ சொல்லும் வேலையை நான் செய்வதற்காக நீ எவ் வளவு தருவாயோ அதற்கு இரட்டிப்பாக அவர்கள் தருவ தாகச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் அவர்கள் சுந்தர விலாச மாளிகையின் மடத்துக்கு வந்து நாம் பேசுவதை மறைவாக இருந்து கேட்கவேண்டு மென்றும் சொன்னார்கள். இது சம்பந்தமாகத்தான் அவர்கள் இருவரும் இன்று இரவு

இங்குவர நேர்ந்தது. நான் அவர்களைச் சந்தித்த இரண்டொரு நிமிஷங்களுக்கெல்லாம் துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது. நாம் மூவரும் ஓடிப்போய்ப் பார்த்ததில் இரு பிரேதங்கள் கிடப்பதைக் கண்டோம். நான் அவர்களுடன் இருப்பதற்காக அவர்கள் பயந்தார்கள். என்னை அவ்வளவு அகௌரவமானவன் என அவர்கள் நினைத்தனர் போலும்! ஆகவே அவர்கள் இந்த மாளிகைக்கு வருவது என்னும் எண்ணத்தையும் விட்டு என்னை அனுப்பிவிடத் தீர்மானித்தார்கள். முதலில் நானும் இந்த இடத்துக்குச் சமீபத்திலும் இராமல் ஓடிப்போவதென்றே நினைத்தேன். ஆயினும் இங்கு வந்து உன்னைப் பார்த்து செல்வநாதர், மோகனதாஸ் ஆகியவர்களுடைய விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போவதே நலமென நினைத்து இவ்விடம் வந்தேன். ஆதலால் நான் தவறாக நடந்துகொண்டேன் என்று நினைக்கிறாயா?' என்று கேட்க ஹேமவதி சீமாட்டி, 'உனக்கு நான் சன்மானம் செய்வேன் என்பதற்காக நீ இங்கு வந்தாயே யொழிய உண்மையில் விஷயத்தைத்தான் சொல்ல வந்தாய் என்பது என்ன நிச்சயம்? அதிருக்கட்டும். உண்மையிலேயே அந்த இரு கனவான்களையும் இந்த மடத்தில் அழைத்து வருவதென நீ நினைத்திருந்தாயா?' என்று கேட்டாள்.

அப்போது ராட்சஸ குப்பன், 'சீமாட்டியே! உண்மையைச் சொல்ல வேண்டுமாயின் அவர்களை இம்மடத்தில் அழைத்து வந்திருப்பேன். ஆனால் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதை உனக்குத் தெரிவிப்பதிலும், நாம் பேசுவது அவர்களுக்குத் தெரியாதபடி மறைப்பதிலும் நான்மிக்க ஜாக்கிரதை எடுத்துக்கொண் டிருந்திருப்பேன். எப்படியாவது உன் நன்மையைக் கருதி அவர்களுடைய விஷயத்தைத் தெரிந்து கொண்டுவிட வேண்டும் என்பது தான் என்

கருத்து' என்று சொல்லி முடித்ததும், ஹேமவதி சீமாட்டி ஒரு வார்த்தையும் பேசாமல் தன் பணப் பையை எடுத்து சொற்ப நோட்டுகளையும் பவுன்களையும் குப்பன் கையில் கொடுத்தாள். அதைக் கண்டதும் சிறிது நேரத்துக்கு முன் செல்வநாதர் கொடுத்த பணமும், இப்போது ஹேமவதி கொடுத்த பணமும் சேர்ந்து பெருந்தொகை தன்னிடம் இருப்பதைஅறிந்து மிகசந்தோஷப்பட்டான். ஆகவே, அவள் கொடுத்த பணத்தை இடுப்பில் சொருகிக் கொண்டே, 'சீமாட்டியே' அப்படியானால் இன்று நான் செய்ய வேண்டிய வேலை வேறு ஒன்றும் இல்லையோ?' என்று கேட்கவும் சீமாட்டி, 'இப்போது ஒன்றுமில்லை. உன் உதவி எனக்கு வேண்டியபோது நான் உனக்குக் கடிதம் எழுதுகிறேன். இப்போது நீ இவ்விடத்தை விட்டு எவ்வளவு சீக்கிரத்தில் போய்விடமுடியுமோ அவ்வளவு விரைவில் போய் விடு' என்றாள். அதற்கு அவன், 'நானும் உடனே இந்தப் பக்கத்திலிருந்தே ஓடிப் போவதாகத் தான் யோசித்திருக்கிறேன். நான் செய்யாத வேலை ஒன்றில் என்மீது சந்தேகம் ஏற்படும்படி நடந்துகொள்ள நான் இஷ்டப்படவில்லை' என்று சொல்லி முடிப்பதற்குள் சீமாட்டி, 'ஆனால் ஒரு வார்த்தை. அந்த செல்வநாதரும், மோகனதாஸும் மறுபடியும் உன்னை வந்து காண்பார்கள். அப்படி வந்தால் அவர்கள் உன்னிடமிருந்து எதிர் பார்ப்பதென்ன என்பதை எனக்கு அறிவிக்க மாட்டாயோ. அப்படித் தெரிவிப்பதால் உனக்குத் தக்கபடி சன்மானம் செய்யும் சுபாவ முடையவள் நான் என்பது உனக்குத் தெரிந்த விஷயமே' என்றாள்.

அதற்கு ராட்சஸ குப்பன், 'சீமாட்டியே! நீ நிச்சயமாக நம்பு. விஷயங்கள் தெரியாதபடி உன்னை அந்தகாரத்தில்

வைத்திருக்கமாட்டேன்' என்று கூறியதும், அவள் அதிக ஆவலுடன், 'நீ இரத்தினபுரிக்குப் போய்ச் சேர்ந்ததும் அந்த இரு கனவான்களும் உன்னைத் தேடிக்கொண்டு வரலாம். அப்போது ஒரு வழி இல்லையா? நான் சொல்வது உனக்குத் தெரிகிறதா?' என்று கேட்டுக்கொண்டு அந்த ராட்சஸனைக் கொடிய பார்வையுடன் பார்த்தாள். குப்பனும், 'ஓஹோ, நீ சொல்வதைத் தெரிந்துகொண்டு விட்டேன். அது ஒரு பிரமாதமா; நடுக் குப்பத்துக்கு வந்தால் அங்கே அவர்களைக் கொல்வது மிக எளிது. அவர்கள் கதி யாதாயிற்று என்று எவராலுமே அறிந்து கொள்ள முடியாதபடி அவர்களைப் பைசல் செய்து விடலாம்,' என்று கூறியதும், சீமாட்டி 'நான் அதிகம் கேட்க விரும்பவில்லை. ஆயினும் ஒன்றுமட்டும் தெரிவித்து விடுகிறேன். அதாவது அவர்கள் இருவரையும் நான் அதிகம் வெறுக்கிறேன். ஆதலால் நீ கூறுகிறபடி அவர்கள் மறைந்து விடுகிறார்களென்றால் நான் அதிக ஆனந்தமடைந்து உனக்கு இரண்டாயிரம் பவுன் சன்மானம் அளிப்பேன்,' என்று தெரிவித்தாள். ராட்சஸன் அளவு கடந்த சந்தோஷமடைந்து, 'நாம் இனியும் நமது சம்பாஷணையை நீட்டிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. நீ என்னை விரைவில் மீண்டும் சந்திப்பாய் என்று நம்புகிறேன்' என்று கூறியதும் அவள், 'நான் பிரதி திங்கள், வியாழக்கிழமைகளிலும் இரவு பதினொருமணிக்கு மேல் இக்கட்டடத்துக்கு வந்து உன்னை எதிர்பார்ப்பேன். இப்போது நீ போகலாம்' என்றாள்.

ராட்சஸ குப்பனும் ஒன்றும் பேசாமல் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான். ஹேமவதி சீமாட்டியும் தன் கையிலிருந்த விளக்கை அணைத்துவிட்டு யாருக்கும் தெரியாமல்

மெதுவாக நடந்து சென்று தன் படுக்கையறையை அடைந்தாள். அங்கே அவள் தனியாக உட்கார்ந்துகொண்டு பல விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கலானாள். அப்போது, 'அந்தக் குப்பனை நம்ப முடியுமா; அவன் மிகப் பொல்லாதவர்களாகிய மோகன தாஸையும், செல்வநாதரையும் என் மாளிகையில் எனக்கும் தெரியாமல் அழைத்துவர நிச்சயித்தானே, அது எனக்குத் துரோகம் செய்ததாகுமன்றோ? ஆகவே இனி அவனுடன் எத்தகைய சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாது. நான் எவ்வகையிலும் அவன் கையில் சிக்கிக்கொள்ளக் கூடாது. நான் சொன்ன குறிப்பிலிருந்தும் பணம் கொடுப்பதாக வாக்களித்ததிலிருந்தும் அவன் விஷயத்தை உணர்ந்துகொண்டு அவர்களிருவரையும் ஒழித்துப் போட்டால் ரொம்பவும் சந்தோஷம்தான். இன்று மோகனதாஸ் மாளிகைக்கு அருகில் வந்ததன் நோக்கமென்ன? ஒருகால் ஷண்பகவல்லியைப் பார்த்துப் பேச வந்திருப்பானோ? ஆம்; அப்பெண் இருக்கும் நிலைமையைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது. அவள் அவனைச் சந்தித்து விட்டிருப்பாள் என்றே நினைக்கிறேன். அவன் அவளுக்கு என்னைப்பற்றித் தவறான எண்ணம் உண்டாகும்படி பல விஷயங்களையும் சொல்லி விட்டிருப்பான். ஆயினும் நான் என் விரோதிகளையெல்லாம் எப்படியாவது ஜெயித்து வெற்றிபெறுவேன் என்பது சத்தியம்' என்று பலவாறு சிந்தித்தாள். ஆனால் அவள் வெற்றி பெற வேண்டுமென்றால் எத்தனைபேர் சாகவேண்டும், எவ்வளவு பணம் செலவாகவேண்டும் என்பதை நினைக்கும்போது அவள் தேகமும் நடுங்கியது.

மறுநாள் காலை அம்மாளிகையில் எங்கும் முன் நாள் இரவு மாளிகைக்கு இரண்டொரு மைல் தூரத்தில் இருமாதர்

கொலை செய்யப்பட்டுக் கிடந்த செய்தியே பரவி இருந்தது. எல்லாரும் அதைப்பற்றியே பேசிக்கொண்டார்கள். ஒரு வேலைக்காரி அச்செய்தியை ஹேமவதி சீமாட்டியிடமும் தெரிவித்தாள். அவளும் ஒன்றும் தெரியாதவள்போல் அவ் விஷயத்தைக்கேட்டுத் தெரிந்துகொண்டாள். மேலும் செல்வ நாதரும், மோகனதாஸும் சாட்சிகளாக விசாரிக்கப்படுவார் கள் என்னும் செய்திதான் அதிக பரபரப்பைக் கொடுத்தது. காலை ஆகாரத்துக்கு எல்லாரும் கூடிய சமயத்தில் ராஜேஸ்வரி, ஷண்பகவல்லி, மதனவல்லிச் சீமாட்டி ஆகியவர்களுக்கும் இச்செய்தி அறிவிக்கப்பட்டது. அப்போது ஷண்பகவல்லி அதிக வருத்தப்படுகிறாள் என்பதை முகக் குறியால் அறிந்த ஹேமவதி சீமாட்டி வேண்டுமென்றே பொய்யாக, அக்கொலை விஷயத்தில் செல்வநாதர், மோகனதாஸ் ஆகியோர்மீதே சந் தேகம் தோன்றியிருப்பதாகவும் தெரிவித்துவிட்டாள். இது ஷண்பகவல்லிக்கு இன்னும் அதிக வருத்தத்தைக் கொடுத் தது. ஹேமவதி உடனே அப்பேச்சை விட்டு விட்டு ஷண் பகவல்லியைப் பார்த்து, 'இன்று காலையில் எழுந்த பிற்பாடு சந்திரசேகரம் பிரபுவைப் பார்த்தாயா?' என்று கேட்க, அப் பெண்மணி, 'ஆம், பார்த்தேன். நான் எதிர்பார்த்த அளவு அவன் சௌக்கியப்படாமல் இருக்கிறான் என்று சொல்ல வேண்டியிருப்பதற்காக வருத்தப்படுகிறேன். அவன் இரா வைச் சுகமாகக் கழித்தானே யொழிய நாம் எதிர் பார்த்த படி அவன் அவ்வளவு சௌக்கியத்தை அடையவில்லை என் றே கூறவேண்டியிருக்கிறது' என்றாள். அப்போது மதன வல்லிச் சீமாட்டி, 'நமது சந்திரசேகரன் நேற்றையதினத்தை விட இன்றுதான் இரணங்களின் வலியை அதிகமாக உணரு கிறான் என்றே சொல்லவேண்டியிருக்கிறது. மேலும் சாதா

ரண முரட்டு மனிதர்களைவிட நம்மைப் போன்றவர்கள் அடி பட்டால் காயத்தை அதிகமாக உணருவது சகஜமே,' என்று தன் வழக்கப்படி பிரபுக்களை உயர்த்தியும் மற்றவர்களைத் தாழ்த்தியும் பேசினாள்.

அப்போது ஹேமவதிசீமாட்டி மறுபடியும் ஷண்பகவல்லியையே பார்த்து, 'இப்போது நாம் கேள்விப்பட்ட இரட்டைக் கொலையைப்பற்றிய செய்தி உனது சகோதரனுக்கும் எட்டி விட்டதா?' என்று கேட்க அப் பெண்மணி, 'நான் அதை அவனிடம் சொல்லலா மென்றுதான் இருந்தேன். ஆனால் வியாதியஸ்தர்கள் சகஜமாகவே பலஹீன மடைந்திருப்பார்க ளாதலின் அவனிடம் இதைச் சொன்னால் திடுக்கிட்டு இன்னும் துன்பத்தை யடையலாம். ஆகவே அவனிடம் சொல்லவில்லை. ஆயினும் நேற்று நாம் இங்கு உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருந்த சமயத்திலேயே இம் மாளிகைக்கு இரண்டு மூன்று மைல் தூரத்துக்குள், நாமும் எதிர்பார்க்காதபடி ஒரு கொலை நடந்திருக்கிற தென்றால் அதைப்பற்றி நினைக்கும்போதே பயங்கரமாகத்தான் இருக்கிறது' என்று தன் தேகம் நடுங்கும் நிலைமையில் அச்சப் பட்டவளாய்க் கூறினாள். அதற்கு ஹேமவதி சீமாட்டியும், 'ஆம், பயங்கரமான விஷயம்தான். அதைக் கேட்கும் ஒவ்வொருவரும் திடுக்கிடுவார்கள் என்பதில் ஐயமில்லை' என்றாள்.

70-வது அத்தியாயம்

—:(o):—

மரண விசாரணை.

மிதுனபுரிக்கடுத்த சாவடியில்தான் கொலை செய்யப்பட்ட பிரேதங்கள் கொண்டுவரப்பட்டு அன்றிரவே அவற்றை ஊர்வலமாக எடுத்துச் சென்று முறைப்படி சேர்த்து வைக்கப்பட்டது. மறுநாள் காலை அதாவது இதற்கு முன் அத்தியாயத்தில் நாம் கூறியபடி ஹேமவதி சீமாட்டி தனது மாளிகையில் விருந்தினர்களுடன் அக்கொலையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது அதே சத்திரத்தில் மரண விசாரணை தொடங்கியது. இந்தக் கொலை விஷயமாய் ஊரெங்கும் அதிக பரபரப்பு ஏற்பட்டிருந்தபடியால் அந்தச் சாவடியில் பெருங்கூட்டம் கூடிவிட்டது. சுமார் பன்னிரண்டு மணிக்கு விசாரணை அதிகாரியும் வந்து சேர்ந்தார். அந்தச் சாவடியிலுள்ள பெரிய அறையில் விசாரணை ஆரம்பமாயிற்று. ஒரு ஜூரியும் வந்து சேர்ந்தார். அந்த விசாரணைக்கு அவசியமான சாட்சிகள் அடுத்த அறையில் நிறுத்தப்பட்டனர். செல்வநாதர், மோகனதாஸ், விவசாயி ஆகியவர்களும் சாட்சிகளாகச் சேர்க்கப்பட்டிருந்தனர். விசாரணை அதிகாரியும், ஜூரியும் பிரேதங்களை நன்றாகப் பரிசோதனைசெய்த பின்னர் முறைப்படி விசாரணையை ஆரம்பித்தார்கள். முதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டவர் மிதுனபுரியிலுள்ள ஒரு ஹோட்டலின் சொந்தக்காரர். அவர் தனது சாட்சியத்தில், கொல்லப்பட்டுப் போன அந்த சீமாட்டியும், அவளது வேலைக்காரியும் அதற்கு முன் நாள் பகல் மூன்று மணிக்குத் தன் ஹோட்டலில் வந்து தங்கியதாகவும், மாலை ஏழுமணிக்கு இருவரும் ஆகாரத்தை அருந்திவிட்டு வெளியே சென்றதாகவும், அவ்வாறு செல்லுகையில்

தாங்கள் இருவரும் இரவு பதினொருமணிக்குப் பின்னர் தான் திரும்ப முடியுமென்று சொல்லிச் சென்றதாகவும், அவர்கள் வெளியே போகும்போது வேலைக்காரி பழுப்பு நிறக் கடிதத்தில் சுருட்டப்பட்ட ஒரு சிறு மூட்டையை வைத்துக்கொண்டிருந்ததைத் தான் கண்டதாகவும், ஆனால் அம் மூட்டையில் என்ன இருந்ததென்பது தனக்குத் தெரியாதென்றும் வெளியே சென்றவர்கள் பிறகு திரும்பி வரவே யில்லையென்றும் சொன்னார்.

இரண்டாவது சாட்சியாக விசாரிக்கப்பட்டவர் யாரென்றால், கொலையுண்ட மாதர்களையும் சாட்சிளாக வந்திருக்கும் செல்வநாதர், மோகனதாஸ் ஆகியோரையும் உபசரித்த விவசாயியே ஆவார். அவர் தனது சாட்சியத்தில், தான் மிதுனபுரிக்கு அப்பால் சிறிது தூரத்தில் தோட்டத்தில் குடிசைகட்டிக்கொண்டு தன் தாயுடனும் சகோதரியுடனும் வாழ்வதாகவும், முன் நாள் இரவு சுமார் ஒன்பதுமணிக்குக் தான் குடிசையின் வெளியே நின்று கொண்டிருந்தபோது கொல்லப்பட்டுப்போன இரு மாதர்களும் அங்கு வந்ததாகவும், அவர்களுக்குத் தான் வரவேற்று தாகசாந்தி செய்வித்ததாகவும், அவர்கள் தன் குடிசையில் இருக்கும்போதே மோகனதாஸ், செல்வநாதர் ஆகிய இரு கனவான்களும் அங்கே வந்து சேர்ந்ததாகவும், மோகனதாஸ் முன்னரே தனக்குத் தெரியுமென்றும் சொல்லிவிட்டு மோகனதாஸ் முதல் முறையாகத் தன் வீட்டுக்கு வரவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்ட காரணத்தையும் விவரித்துக் கூறினார். மேலும் குறுக்கு விசாரணையில் அந்த விவசாயி, கொலை செய்யப்பட்டுப்போன அவ்விரு மாதர்களும், செல்வநாதருக்கும், மோகனதாஸுக்கும் முன் பின் தெரியாதவர்களே என்று உறுதியாகக் கூறினார். அவ்விரு மாதர்களும் தன் குடிசையை விட்டுச் சென்ற பின்னர்

எந்தத் திக்கில், எங்கே போனார்கள் என்பது தனக்குத் தெரியாதென்றும், இரு கனவான்கள் மட்டும் பின்னும் சிறிது நேரம் தன் வீட்டிலேயே தங்கி இருந்துவிட்டுத் தன் தாயார் அவர்களுக்குச் செய்த உபகாரத்துக்காக ஐந்து பவுனை சன்மான மளித்து விட்டு வெளியில் சென்றதாகவும், அவர்கள் சென்ற முக்கால்மணி நேரத்துக்கெல்லாம் மோகனதாஸ் மீண்டும் மிக்க பயங்கரமான தோற்றத்துடன் தன்வீட்டுக்கு ஓடி வந்து அம்மாதர்கள் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாகவும், தான் அதை மிதுனபுரி அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டுமென்று தன்னைக் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

மூன்றாவது சாட்சியாக மோகனதாஸ் விசாரிக்கப்பட்டான். அவன் தனது சாட்சியத்தில், தான் தனது நண்பர் செல்வநாதருடன் முன் நாள் மாலைதான் மிதுனபுரிக்கு வந்ததாகவும், இரவில் கிருஷ்ணகிரியிலுள்ள சுந்தரவிலாச மாளிகைக்குச் செல்வதற்காக ஆற்றோரமாகப் போய்க் கொண்டிருந்ததாகவும், விவசாயியின் குடிசைக்குத் தாக சாந்திக்காகச் சென்றபோது அங்கு அம்மாதர்கள் இருவரையும் கண்டதாகவும், அவர்களில் ஒருத்தி நாடக மேடையில் பிரசித்தி பெற்ற கமல குமாரி என்று சொல்லிக்கொண்டதாகவும், மற்றொருத்தி அவளுடைய வேலைக்காரி என்று தெரிந்ததாகவும், சொல்லி கமல குமாரி தனக்கு தினகரம் பிரபு, சந்திர சேகரம் பிரபு ஆகியோர் தெரியுமென்று சொன்னதையும் தெரிவித்தான். அப்போது விசாரணை அதிகாரி; அம்மாதர்களும் சுந்தரவிலாச மாளிகைக்குத்தான் செல்லயோசித்திருப்பார்களோ என்று நினைக்க ஏதேனும் ஆதாரமிருக்கிறதா என்று மோகனதாஸைக் கேட்டதற்கு அவன், அவ்விஷயத்தில் ஒன்றும் நிச்சயமாகக் கூற முடியவில்லையென்று கூறினான். பிறகு

அவன் தானும் செல்வநாதரும், துப்பாக்கி வெடிசத்தத்தைக் கேட்ட விவரத்தைக் கூறினான். மேலும் அவன் அச் சத்தத்தைக் கேட்டு, அது உண்டான இடத்துக்குத் தானும் தனது நண்பரும் ஓடியதையும், பிரேதங்களைக் கண்டதும் தான் மறுபடியும் குடிசைக்கு ஓடிப் போலீசாருக்குத் தகவல் அறிவிக்கும்படி அந்த விவசாயியைக் கேட்டுக்கொண்டதையும் விவரமாகத் தெரிவித்தான். அவன் சாட்சியத்தைக் கூறி முடித்ததும் விசாரணை அதிகாரி, செல்வநாதரின் சாட்சியம் அவசியமில்லையென்றும், ஏனெனின், மோகனதாஸ் சொன்னதைத்தான் செல்வநாதரும் திருப்பச் சொல்வாராதலால் அது வேண்டாமென்றும் கூறினார்.

பிறகு கொலை நடந்த இடத்துக்குச் சென்றிருந்த மாஜிஸ்ட்ரேட் சாட்சியாக விசாரிக்கப்பட்டதில் அவர், தான் சென்று பிரேதங்களைப் பரிசோதித்த விவரத்தைவும், கொல்லப்பட்டவர்களின் தேகத்தில் இருந்த நகைகளோ, பணமோ கொள்ளை போகவில்லையென்றும், வேலைக்காரி கையில் வைத்திருந்ததாக ருஜுப்பிக்கப்பட்ட சிறு மூட்டைதான் காணப்படவில்லை என்பது நிச்சயமென்றுங்கூறினார். பின்னர் மிதுனபுரி தாணாவைச்சேர்ந்த எட்கான்ஸ்டபில் விசாரிக்கப்பட்டார் அவர், தான் முன் நாள் இரவு கொலை நடந்த இடத்துக்கு மற்றும் சிலருடன் சென்று திரும்பியதாயும் மறுபடியும் விசாரணை நடைபெறும் நாளன்று காலை அங்குச் சென்று ஸ்தாவில் விழுந்துள்ள காலடிகளைக் கொண்டு உளவு கண்டுபிடிக்க முயன்றதாயும், ஆனால் முன்நாள் இரவு மழை பெய்திருந்தால் காலடிகளைக் காண்பதே அரிதாய்விட்டதென்றும், அக்கம் பக்கத்திலுள்ள வயல்களில் எங்கேயாவது அச் சிறு மூட்டையை அவிழ்த்து அது சுற்றப்பட்டிருந்த பழுப்பு நிறக் காகிதத்தையாவது, நூலையாவது எறிந்திருக்கிறார்களா

என்று பார்க்கக் கருதி தேடியதாகவும், ஆயினும் அவ்வழியி லும் எவ்வகை உளவும் அகப்படவில்லையென்றும், மேலும் அருகாமையிலுள்ள பல குடிசைகளில் வசிப்பவர்களிடம் யாரேனும் சந்தேகப் பேர்வழிகள் அப்பிரதேசத்தில் வந்தார் களா என்று விசாரித்தும் ஒன்றும் புலன் வெளியாக வில்லை யென்றும் சொன்னார்.

கடைசியாக அப்பிரேதங்களைப் பரிசோதித்த டாக்டர் சாட்சியாக விசாரிக்கப்பட்டதில், அவர், கமலகுமாரி தலையில் சுடப்பட்டிருந்தாளென்றும், அவளது வேலைக்காரி, ஹிருத யத்தில் சுடப்பட்டிருந்தாளென்றும், சுட்டவர் அதிசமீபத்தி லிருந்தே சுட்டிருக்கவேண்டுமெனத் தெரிகிறதென்றும், இரு வருமே திடீரென்று விரைவில் இறந்துவிட்டவர்களென்றும் கூறினார். இந்த விசாரணையானது மூன்றுமணி நேரம் நடை பெற்றது. கடைசியில் விசாரணை அதிகாரி, சாட்சிகள் கொடுத்த சாட்சியத்தின் விஷயங்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஜூரிக்கு விஷயத்தை விளக்கினார். அவ்வாறு விளக் கியபோது இச்சம்பவம் மிக்க ஆச்சர்யகாமாய் இருக்கிற தென்றும், இப்படிப்பட்ட ஆச்சர்ய சம்பவங்கள் நடைபெறு வது அபூர்வமென்றும், வெடிச்சத்தத்தைக் கேட்டதும் செல் வநாதரும், மோகனதாஸனும் பீதியால் இட்ட கூச்சலைக் கேட்டு இக்குற்றத்தைச் செய்தவர்கள் ஓடிப்போய் இருக்க வேண்டுமென்றும் அப்படி ஓடிப்போகும்போது கொலை செய் யப்பட்டவர்களிட மிருந்த நகைகளையோ, பணத்தையோ எடுக்கச் சாவகாசமில்லாமற் போனதால் வேலைக்காரியின் கையிலிருந்த மூட்டையைப் பிடுங்கிக்கொண்டு போயிருக்க வேண்டுமென்றும் கூறிவிட்டு மேலும் மிக ஜாக்கிரதையுடன் ஆராய்ந்தவர்போல் கூறியதாவது:—ஜூரர்களே! இந்த வழக் கில் ஸ்ரீமான்களான செல்வநாதரும், மோகனதாஸனும் மிக்க

5 JUL 1933
MADRAS

சங்கடமான நிலைமையில் இருக்கிறார்கள் இதுபோன்ற குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாத வழக்குகளில் சாதாரணமாக யார்மீது சந்தேகம் தோன்றுகிறதோ, அல்லது யார் அந்தச் சமயத்தில் இருந்தார்களோ அவர்கள் மீதே குற்றத்தைச் சுமத்திவிடுவது வழக்கம். ஆனால் இவ்வழக்கில் நான் அவ்வாறு செய்ய விரும்பவில்லை. செல்வநாதரும் மோகனதாஸனும் மிக்க பெருந்தன்மை யுடையவர்களாகவும் இருக்கின்றன ரென்பது அவர்கள் பெற்ற சிறு உதவிக்காக விவசாயக் குடும்பத்து அவர்கள் செய்த பொருளுதவியிலிருந்தே தெரிகிறது. மேலும் அந்தக் கனவான்கள் அதே விவசாயியின் குடிசையில் அம்மாதர்களைச் சந்தித்திருக்கிறார்கள். அவர்கள் அதற்குமுன் எவ்வகையிலும் பரஸ்பரம் தெரியாதவர்கள் என்பது சாட்சியங்களிலிருந்து ஏற்பட்டிருக்கிறது. மாதர்கள் கொலை செய்யப்பட்டதும் அப்பிரேதங்களைக்கண்ட இவ்விரு கனவான்களும் உடனே போலீசுக்குத்தகவல் தெரிவித்ததுடன் வேண்டிய உதவிகளையும் செய்திருக்கிறார்கள் இச் சந்தர்ப்பங்களை யெல்லாம் கவனிக்கும்போது அவர்கள் மீது எத்தகைய குற்றமும் சுமத்த முடியாமல் இருக்கிறது.

விசாரணை அதிகாரி இவ்வாறு கூறி முடித்ததும் ஜூரர்கள் சிறிதுநேரம் யோசித்துப் பார்த்து யாரோ ஒருவர் அல்லது பலர் வேண்டுமென்று கொலை செய்திருக்கிறார்கள் என்று தங்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். விசாரணை இவ்வாறு முடிவுபெற்றது. ஆகவே செல்வநாதரும் மோகனதாஸனும் மிதுனபுரியில் தாங்கள் தங்கியிருந்த ஓட்டலுக்குப் போனார்கள். அங்கே அவர்கள் அதற்கு மேற்கொண்டு என்னசெய்வதென்று யோசித்தார்கள். செல்வநாதர், தாங்கள் சுந்தர விலாச மாளிகைக்கு மிக்க சமீபத்தில் வந்துவிட்டிருப்பதால் எப்படியாவது அங்குச் சென்று ஹேமவதி சீமாட்டியைக்

கண்டு, மோகனதாஸ் விஷயமாய் அவள் பரவச் செய்துவிட்டிருக்கும் பொய்க்கூற்றுக்குப் பரிகாரம் தேடும்படி சமாதானமாகக் கூறலாமென்றும், அப்படி வழிக்கு வராவிட்டால் ராட்சஸ குப்பனுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருப்பதால் அவளே இக்கொலைக்குக் காரணமாய் இருக்க வேண்டுமென்று கூறி மிரட்டலாமென்றும் யோசனை கூறினர். ஆனால் தீர்க்கமாக ஆலோசித்துப் பார்த்ததில் ஹேமவதி சீமாட்டி இப்படிப்பட்ட மிரட்டல்களுக்குப் பயப்படமாட்டாள் என்றும், குப்பனுடன் தான் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டிருப்பதையே கண்டிப்பாக மறுத்துவிடுவாளென்றும் உணர்ந்தால் அங்கு போவதில் பிரயோசனமில்லை யென்றும், மோகனதாஸுடன் இரத்தின புரிக்குச் சென்று சாவகாசமாக அதைப்பற்றி யோசிப்பதென்றும் தீர்மானித்தார்.

அவர் தீர்மானித்ததை மோகனதாஸினிடம் சொன்னதால் அதைக்கேட்ட அவன், 'ஐயோ, அப்படியானல் என தன்புள்ள ஷண்பகத்தை அந்தப் பாழும் ஹேமவதி சீமாட்டியின் கூட்டத்திலேயே விட்டுவைப்பதா? உடனே அவளை அங்கிருந்து அப்புறப்படுத்திவிடுவது நலமல்லவா? மரியாதையுள்ள ஐயா! தங்களுக்கு ஏதேனும் செல்வாக்கு இருக்குமாயின்' என்று இன்னும் ஏதோ சொல்லி முடிப்பதற்குள் செல்வநாதர், 'சரி, நிறுத்து. நீ பேசியது போதும். இரத்தின புரிக்குப் போனபிறகுதான் எதைப்பற்றியும் யோசிக்க முடியும். அங்கிருந்துதான் இதுவிஷயமாக மதனவல்லிச் சீமாட்டிக்குக் கடிதம் எழுதுவேன்; எதற்கும் இன்னும் சொற்ப தினங்களுக்குள் ஷண்பகவல்லியும் அவளது சிற்றன்னையாகிய மதனவல்லிச் சீமாட்டியும் ஹேமவதி சீமாட்டியின் மாளிகையில் இல்லாதபடி செய்துவிடுவேன் என்பது நிச்சயம். அப்

படிச் செய்துவிட்டால் உனக்குத் திருப்திதானே' என்றார். அதற்கு மோகனதாஸ், 'அவ்வாறு செய்துவிட்டால் நான் ஆனந்தக் கூத்தாடுவேன். எல்லா விஷயங்களிலுமே உங்கள் அபிப்பிராயப்படி செய்யத் தயாராகக் காத்திருக்கிறேன். அப்படியானல் இரத்தினபுரிக்கு எப்போது புறப்படுவோம்' என்று கேட்க, அப்பெரியார், 'இப்போது ஆகாரம் முடிந்த பின்னர் கிருஷ்ணகிரியின் பக்கமாகப்போய் வருவோம். நாளை காலை இங்கிருந்து இரத்தினபுரிக்குப் புறப்படுவோம். நீ போக்கிரிப் பையல். ஒருநிமிஷ நேரமாவது ஷண்பகவல்லியைப் பார்த்துப் பேச விரும்புகிருய் போலிருக்கிறது ஆயினும் இச்சமயத்தில் ஒன்றும் செய்ய முடியாது. இரத்தினபுரியில் நான் கவனிக்கவேண்டிய வேலைகள் பல உள.' என்று தெரிவித்தார். மோகனதாஸின் மனதிலுள்ளதைப் பெரியார் தெரிந்துகொண்டதில் ஆச்சர்யமொன்றுமில்லை. அவனுடைய அன்புள்ள காதலியாகிய ஷண்பகத்தைப் பார்த்து இரண்டொரு நிமிஷ நேரமாவது பேசவேண்டுமென்று தோன்றியிருந்தால் அது சகஜமானதேயொழிய எவ்விதத்திலும் தவருகாது. ஆகவே அவளைக் காணவேண்டுமென்னும் நம்பிக்கையுடன் அவன் சுந்தரவிலாச மாளிகைக்குச் செல்ல முயன்றிருப்பான் என்பது வாஸ்தவமே. ஆயினும் அவன் செல்வநாதரின் இஷ்டத்துக்கு இணங்க வேண்டியதாக இருந்தபடியால் ஒன்றும் சொல்லாமல் இருந்தான்.

அன்று காலை சந்திரசேகரனுடைய தேக நிலைமையைப் பற்றி அறிவதற்காக சுந்தரவிலாச மாளிகைக்கு வந்த தியாகராஜன், அப்படியே மிதுனபுரிக்குச் சென்று முன்னாள் இரவு நடைபெற்ற கொலை சம்பந்தமாய் நடைபெறும் விசாரணையைப்பார்த்து அதுபற்றிய முழு விவரத்தையும் தெரிந்துகொள்வ

தாக அம்மாளிகையி லுள்ளோரிடம் சொல்லிவிட்டு மிதுன புரிக்குச் சென்று விசாரணையைக் கவனித்தான். விசாரணை முடிந்தபின்னர் அவன் சுந்தரவிலாச மாளிகைக்குச் சென்று விசாரணை விவரம் முழுதையும் அங்குள்ளோரிடம் தெரிவித்தான். அப்படித் தெரிவிக்கும்போது சாப்பாட்டு வேளையாக இருந்ததால் ஹேமவதி சீமாட்டி அவனையும் சாப்பாட்டுக்கு இருக்கும்படி கேட்டுக்கொண்டாள். அந்தக் கோரிக்கையை அவனும் மறுக்கவில்லை. அவன் சாப்பாட்டுக்கு அச் சீமாட்டிகளுடன் உட்கார்ந்திருந்தபோது, 'விசாரணையில் வெளியான செய்தியிலிருந்து செல்வநாதரும் மோகனதாஸனும், அச்சம்பவம் நடைபெறும்போது நமது சுந்தர விலாச மாளிகைக்குத்தான் வந்துகொண்டிருந்தார்களென்று தெரிகிறது!' என்றதும் ஹேமவதியும் அதிக பெருமையுடன் பேசுபவள்போல், 'அப்படியே இருக்கலாம். ஆயினும் அவர்கள் இங்கே வந்திருந்தால் நான் கட்டாயமாக அவர்களை வரவேற்றிருக்கமாட்டேன்,' என்றாள். அவ்வாறு சொன்னதைக் கேட்ட ஷண்பகம் திடுக்கிட்டு அதிக கோபத்துடன் ஹேமவதியின் முகத்தைப் பார்த்தாள். ஆயினும் ஷண்பகத்தின் இந்த உணர்ச்சியை ஹேமவதி அறியவில்லை.

இரத்தினபுரியில் மோகனதாஸ் விஷயமாக உலாவி வந்த அபவாதச் சொல் தியாகராஜனுக்குத் தெரியாதாகையால் செல்வநாதர், மோகனதாஸ் இவர்கள் விஷயத்தில் ஹேமவதி சீமாட்டி ஏன் இவ்வாறு ஆத்திரமடைந்தாள் என்பதை உணராதவனாகி, 'அவ் விசாரணை விஷயமாய் மேலும் பேசுகையில், 'உண்மையை உரைக்கவேண்டுமாயின் மோகனதாஸினிடம் எனக்கும் அனுதாபமும், அபிமானமும் ஏற்பட்டுவிட்டதென்றே கூறவேண்டும். அவன் அவ்வளவு உண்மையாக நடந்துகொண்டான். கள்ளங் கபடமற்ற சுபாவமுடைய

வன் அவன் என்பது அவனது முகத்திலிருந்தே தெரிகிறது. விசாரணை அதிகாரியும் அவனைப் பாராட்டிப் பேசினார்' என்று கூறினான். அவன் அவ்வாறு பேசியபோது ஷண்பகவல்லியின் முகத்தை நோக்கியிருந்தால் அவள், அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததுடன் அவன் அவ்வாறு தன் காதலனைப்பற்றிப் பெருமையாகப் பேசுவதற்காக அவனுக்கு வந்தனம் செலுத்துபவள் போலவும் காணப்பட்டதை அறிந்திருக்கலாம். மேலும் அப்படிப்பட்ட உயர்ந்த குணாதிசயங்களையுடைய மோகனதாஸைப்பற்றி ஹேமவதி சீமாட்டி அயோக்கியத்தனமாகப் பொய் வதந்தியைப் பரவச் செய்ததால் ஆத்திரமடைந்து அதையும் அப்போது இழுத்து விடலாமா என்று நினைத்தாள். ஆயினும் அவள் இன்னும் சொற்ப காலமேனும் மிகப் பொறுமையுடன் இருக்கவேண்டுமென்று அவளுடைய காதலன் கட்டளை இட்டிருந்ததால் தன் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டாள். இந்த நேரத்தில் அவர்கள் சாப்பாடும் முடிந்தது. அதன் பின்னர் வழக்கப்படி தியாகராஜனும், ராஜேஸ்வரியும் தோட்டத்தில் உலாவுவதற்காகத் தனியே சென்றார்கள்.

அக் காதலர்கள் இருவரும் தோட்டத்தில் தனியே இருந்தபோது தியாகராஜன் ராஜேஸ்வரியிடம், 'என் கண்ணே, நான் உனது தாயாரின் முன்னிலையில் மோகனதாஸைப்பற்றி அவ்வளவு சிறப்பாகப் பேசியதை அவள் தவறாக நினைப்பாளோ என்று அஞ்சுகிறேன். அவ்விஷயத்தில் உன் அபிப்பிராயமென்ன?' என்று கேட்க, அவள், 'உண்மையைச் சொல்ல வேண்டுமாயின் நீ அவ்வளவு சிறப்பாகக் கூறும் அதே மோகனதாஸ் என் தாயினிடம் அவமானமடைந்திருக்கிறான். என் தாயார் அவனிடம் பிரியமாக இருந்ததை அவன் தவறாக அர்த்தம் செய்துகொண்டு அவள் அவனைக் காதலிப்பதாக

நினைத்துத் தவறான வழியில் இறங்கிவிட்டான். அதற்குமேல் நான் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை என்று நினைக்கிறேன்' எனக் கூறினாள். அதற்குத் தியாகராஜன், 'ஓ, அப்படியானால் நான் உன் தாயாரின் எதிரில் மோகனதாஸைப்பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்து விட்டதற்காக வருந்துகிறேன். இனி நான் இப்படிப்பட்ட சமயங்களில் மிக ஜாக்கிரதையாக இருப்பேன். ஆயினும் உண்மையிலேயே அவன் இந்த உலகத்திலேயே மிக்க நற்குணம் வாய்ந்தவன் என்று நான் உறுதியாகக் கூறுவேன். காலை விசாரணை நடந்த இடத்தில் கூட்டம் மட்டும் அவ்வளவு இல்லாமல் இருந்திருந்தால் நான் அவனை நெருங்கிச் சென்று கைகுலுக்கி இருப்பேன். ஆ, அதோ யாரோ வருகிறார்கள். இந்தச் சீமாட்டியைக் காண சதா யாரேனும் வந்துகொண்டேயிருக்கிறார்கள்' என்றான். அப்போது அம்மாளிகையின் வாயிலை நோக்கி ஓடிவந்த ஒரு வண்டியைக் கண்ட பிறகுதான் தியாகராஜன் அவ்வாறு கூறினான். ராஜேஸ்வரியோ வந்தவர் யார் என்பதில் சிறிதும் கவலை செலுத்தாமல் தன் காதலனுக்குப் பிரியமான பல விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள்.

அம்மாளிகையை நோக்கி வந்தவர் யார்? அவ் வண்டி அந்த மாளிகையை அடைந்தபோது ஹேமவதி சீமாட்டி தனியே அறையில் உட்கார்ந்து சில கடிதங்களை எழுதிக் கொண்டிருந்தாள். அவ்வறைக்கு ஒரு வேலைக்காரன் வந்து வந்தவரின் விலாசமடங்கிய ஒரு கடிதத்தைச் சீமாட்டியிடம் காண்பித்துக்கொண்டே, 'அம்மணி! இந்தக் கனவான் உங்களைக் காண விரும்புகிறார்' என்றான். அக்கடிதத்தை எடுத்துப் பார்த்ததில் அதில் டாக்டர் குணசிங்கம் என்று எழுதப்பட்டிருந்தது. ஹேமவதி சீமாட்டியைக் கண்டு பேச டாக்டர் குணசிங்கம் வந்திருக்கிறார் என்று ஏற்பட்டது.

71-வது அத்தியாயம்

186578

டாக்டரும் சீமாட்டியும்.

சென்ற சில வாரங்களாகவே ஹேமவதி சீமாட்டிக்குப் பல துரதிஷ்டமான சம்பவங்களும், பயமுறுத்தல் நிகழ்ச்சிகளும் ஏற்பட்டு வந்தன. ஆனால் புதிது புதிதாகக் கஷ்டங்கள் தோன்றியபோதெல்லாம் சீமாட்டி சிறிதும் அதைரியமோ பீதியோ அடையாமல் அக்கஷ்டங்களை யெல்லாம் ஜெயிப்பது எப்படி என்பதில் கவலை செலுத்தி வந்தாள். எல்லாக் கஷ்டங்களும் ஒரே முறையில் ஏற்பட்டாலாவது அல்லது ஏற்படுமென்று தெரிந்தாலாவது அவள் அவற்றிற்கெல்லாம் தக்க பரிகாரம் தேடி இருப்பாள். ஆனால் அவை ஒன்றன்பின் ஒன்ருக ஏற்பட்டதால் அவள் ஒன்றைச் சமாளித்துக்கொள்ள முயலும்போது வேறு ஒன்றைத்தானே ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய நிலைமையும் ஏற்பட்டு வந்தது. எது எப்படியாயினும் சீமாட்டி மட்டும் தைரியமாக அவைகளையெல்லாம் எதிர்த்துப் போராடிக்கொண்டுதான் வந்தாள். ஆனால் இப்போது அவள் எதிர்பாராத ஒரு பெரிய கஷ்டம் திடீரென்று சம்பவித்துவிட்டது. அதைக்கண்டு அவளே ஆச்சர்யமும் திகைப்பும் அடைந்துவிட்டாள். டாக்டர் குணசிங்கத்துக்கு அவள் ஹேமவதி சீமாட்டி என்று இதுவரை தெரியாது. சாதாரண சொர்ணம் என்றுதான் தெரியுமாதலால் அவர் திடீரென்று அவளுடைய உண்மை நிலைமையைத் தெரிந்துகொண்டு அதிலும் கிருஷ்ணகிரி சுந்தரவிலாச மாளிகைக்கே வந்ததை யறிந்ததும் அவள் திடுக்கிட்டாள். ஆகவே அச்சீமாட்டி கையிலெடுத்த அக்கடிதம் அப்படியே கீழே

கழுவிவிட்டது. ஹேமவதி சீமாட்டி திக்பிரமையால் மிரண்டதால் அக்கடிதம் கீழே விழவேண்டியதாயிற்று.

ஆனால் அவள் அதைக் காட்டிக்கொள்ளாமல் அதிக தைரியத்துடன் சமாளித்துக்கொண்டு கீழேவிழுந்த கடிதத்தை மறுபடியும் எடுத்து உற்றுப் பார்த்தாள். பிறகு அவள் தன் சேவகனிடம், 'டாக்டர். குணசிங்கத்தை இவ்வறைக்கு அழைத்துவா! என்று மெய்நடுங்க வாய்குளற மெதுவான சத்தத்துடன் கூறினாள். உடனே சேவகனும் வந்தனம் செலுத்திவிட்டு வெளியே சென்றான். அவன் வெளிச் சென்றதும் சீமாட்டி தன்கையால் தன்னுடைய நெற்றியைப்பிடித்துக்கொண்டு, 'ஐயோ கடவுளே! என்னென்ன கஷ்டங்கள் ஏற்படுமோ' என்று கதறினாள். தான் அழிந்து போகக்கூடிய காலம் வந்துவிட்டதோ என்று நினைத்துத் துக்கப்பட்டாள். ஆயினும் கண்ணீர்விட்டுக்கொண்டு சிந்தனை செய்துகொண்டே இருந்தபோது அவள் மனதில் திடீரென்று ஒருவித சந்தோஷமும் நம்பிக்கையும் உதயமாயிற்று. அதாவது டாக்டர். குணசிங்கம் அவளை அன்புடன் பல வருஷங்களாக நேசிப்பவன் ஏதோ ஒரு இரகசியத்தை அவன் அறிந்திருந்தாலும் அவளிடம் அவருக்குள்ள அன்பு காரணமாக அவர் அதை வெளியிட்டுத் தனக்குத் துரோகம் செய்யமாட்டார் என்று நிச்சயமாக நம்பினாள். சமீபத்தில் அவள் அவரைச் சந்தித்தபோதும், அவர் தன் உயிர் போவதாயினும் அவளுடைய இரகசியத்தை வெளியிடுவதில்லையென வாக்களித்தது அப்போது அவளுக்கு ஞாபகத்துக்கு வந்தது. மேலும் அவர் தன்னிடம் அளவிலாக் காதல் கொண்டிருப்பதால் எப்படியேனும் தன் அழகைக்கொண்டு அவரைச் சரிப்படுத்திக்கொள்ளலாம் என்றும் துணிந்தாள்.

அச்சமயத்தில் அவ்வறையின் கதவும் திறக்கப்பட்டது. சீமாட்டியும் மனோ தைரியத்துடன் வரப்போகும் தொல்லையை எதிர்க்கத் தன்னைத் தயாரித்துக்கொண்டாள். அந்தப் பழைய சாதாரண சொர்ணமே ஹேமவதிசீமாட்டி என்பதை டாக்டர் அறிந்துகொண்டே இங்கு வந்திருப்பாராதலால் தன்னைக் கண்டதும் அவர் ஆச்சர்யப்படமாட்டார் என்று நம்பினாள். எனினும் கதவின் பக்கம் முதுகைக் காட்டிக் கொண்டு உட்காருவதே நலமென்றும், அவர் முன் பக்கமாக வந்து தன்னைப் பார்த்து ஆச்சர்யப்படுவதற்குள் வேலைக்காரன் வெளியே போய்விடுவானாதலால் அவனுக்கு எப்படிப்பட்ட சந்தேகமும் ஏற்படக் காரணமில்லாமற் போகுமென்றும் நினைத்து அவ்வாறே உட்கார்ந்து எதையோ எழுதிக்கொண்டிருந்தாள். சேவகனும் டாக்டரை அவ்வறையில் அழைத்து வந்து, 'சீமாட்டியே, டாக்டர் குணசிங்கம் வந்திருக்கிறார்' என்று சொல்லிவிட்டு மீண்டும் வெளியே போய் அறையின் கதவைச் சாத்திவிட்டான். டாக்டரைக்கண்டதும் ஹேமவதி சீமாட்டி தன் ஆசனத்தினின்றும் எழுந்தாள். தான் சாதாரண சொர்ணமென்று நினைத்திருந்த ஒரு மாது சுந்தரவிலாச மாளிகையின் சொந்தக்காரியாகிய ஹேமவதி சீமாட்டியாகவும், ரூபலாவண்யத்தில் சிறந்தவளாகவும் இருப்பதை நேரில் கண்டதும் அளவுகடந்த பிரமையிடன் தனக்கும் தெரியாமல் 'ஹா' என்று அலறினார். அதைக் கேட்டதும் ஹேமவதி பரிவுடன் அவரது கையைப் பிடித்துக்கொண்டு அன்பான தோரணையில் 'டாக்டரவர்களே! ஆச்சர்யப் படவேண்டாம் நீங்கள் நினைப்பது சரியே. இனி சொர்ணம் என்பவள் மறைந்து விட்டதாக நினையுங்கள்' என்று கூறினாள். அப்போது அவரும் மனக்குழப்பமடைந்த நிலைமையில் அவளது கரத்தைப் பற்றிக்கொண்டு, 'ஆ, அப்படியும் இருக்குமா? இதென்ன ஆச்சர்யம்' என்று மிரண்டார்.

அச்சமயம் சீமாட்டி, 'அன்பரே! ஒரு ஆசனத்தில் அமருங்கள். நானும் உங்கள் அருகில் உட்காருகிறேன். தாங்கள் இங்கு வந்த விசேஷத்தை விவரமாகக் கூறுங்கள்' என்று கேட்டுக் கொண்டாள். அதற்கு அவர் அப்போதும் மனக் குழப்பம் நீங்காதவராய், 'ஓ, நீதானு ஹேமவதி சீமாட்டி, நீதானு இம்மாளிகையின் சொந்தக்காரி,' என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அப்போது சீமாட்டி, 'ஆம்; தங்களை நான் ஆவலுடன் இம்மாளிகையில் வரவேற்கிறேன். தாங்கள் இங்குவந்த விசேஷம் என்ன என்பதைத் தைரியமாகச் சொல்லுங்கள். என்னைத் தாங்கள் ஏன் இப்படிப் பார்க்கவேண்டும்? என்னிடம் தங்களுக்கிருந்த அன்பும் விசுவாசமும் மறைந்து விட்டதா?' என்று பரிவுடன் கேட்டதற்கு அவர், 'இல்லவே இல்லை. நமது அன்பு குறையாதபடி இருக்க வேண்டுமென்றுதான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்' என்று சொன்னதுடன் சிறிது மனத் தெளிவையும் பெற்றூர். ஆகவே அவள், 'ஐயா, அப்படியானல் தாங்கள் என்ன வேலையாக இங்கு வந்தீர்கள் என்பதை உடனே சொல்லுங்கள். மேலும் ஹேமவதி சீமாட்டியைப்பார்க்கவந்த நீங்கள் பழையபடி சொர்ணத்தைப் பார்ப்பதென்னும் எண்ணத்துடன் தாங்கள் வந்திருக்கமுடியாதாகையால் இப்போது தாங்கள் எதற்காக வந்தீர்களென்பதைத் தெரிந்துகொள்ள மிக ஆவலுடன் இருக்கிறேன். மேலும் எதற்காக முதலில் நமக்குள் சிநேகம் ஏற்பட்டதோ அது சம்பந்தமாகத் தாங்கள் வந்திருக்க முடியாதென்றும் நினைக்கிறேன்' என்ருள். அதற்கு அவரும், அது சம்பந்தமாக நான் வரவில்லை என்பது உண்மையேயாயினும், இப்போது நான் வந்திருக்கும் வேலை மிக்க அதிருப்திகரமான தாகையால் அதை எப்படிச் சொல்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். எனினும் அதற்குத் தக்க சமாதானம் உன்னல் கூற

முடியுமென்றே நினைக்கிறேன். அந்த சக்தி உனக்குக் கொடுக்கும்படி இறைவனைப் பிரார்த்திக்கிறேன்' என்று கூறினார்.

அப்போது ஹேமவதி சீமாட்டி அதிக பரபரப்புடன், 'தாங்கள் பேசுவதின் பொருள் எனக்கு விளங்குவதில்லை. விஷயம் தெளிவாகத் தெரியாமல் மனம் அதிக கஷ்டப்படுகிறது. ஆதலின் தயவுசெய்து தாமதம் செய்யாமல் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லிவிடுங்கள்' என்று கேட்டுக்கொண்டாள். அப்போது அவர், 'அப்படியானால் நான் சொல்வதைக் கவனமாகக்கேள். நான் ரசாயன சாஸ்திர ஆராய்ச்சியில் அதிக ஊக்கமுடையவன் என்பது உனக்குத் தெரிந்த விஷயமே. இப்போது அதைப் பற்றி ஏன் பிரஸ்தாபிக்க வேண்டுமென்று நினைக்கவேண்டாம். நான் சொல்லப் போவதுடன் இது சம்பந்தப்பட்டிருக்கிறது. சில தினங்களுக்கு முன்னர் என்னிடம் ஒரு வயோதிகமாதின் பிரேதம் கொண்டுவரப்பட்டது. அதை நான் சோதித்துப் பார்த்ததில் அது இயற்கை மரணமல்லவென்றும், விஷத்தாலேற்பட்ட மரணமாகத்தான் இருக்கவேண்டுமென்றும், அதிலும் அந்தவிஷம் என்னால் கண்டுபிடிக்கப்பட்டதும், அன்று நீ என் வீட்டுக்கு வந்திருந்தபோது நான் உனக்குக் காண்பித்ததுமான அந்த விஷமே அது என்றும் தோன்றியது.' என்று சொல்லிக்கொண்டே வரும்போது சீமாட்டி இமை கொட்டாமலும் அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் அவ்வளவு கவலையுடன் தன்னைக் கவனிக்கிறாள் என்பதை டாக்டர் உணரவில்லை.

ஆகவே அவர் மேலும் பேசத் தொடங்கிக் கூறியதாவது:—'நான் இந்த முடிவுக்கு வரவே எனக்கு அதிக கவலையும் பயங்காமும் ஏற்பட்டு விட்டது. ஏனென்றால், நான்

கண்டு பிடித்த அந்த விஷத்தில் ஒரு சிறு புட்டியையேனும் நான் யாருக்கும் கொடுத்ததில்லை. இரு முறைகளில் நான் அதை உனக்கு மட்டும் காண்பித்தேன். முதல் முறை உனக்குக் காட்டியபோது ஒரு சீசா கீழே விழுந்து உடைந்து விட்டது. இரண்டாவது முறை நான் உனக்குக் காண்பித்த போது அதை நானே நன்றாக அடைத்து மிகப் பத்திரமாக பீரோவில் வைத்துவிட்டேன். அதை யாரும் எடுத்திருக்க முடியாது. அப்படி யிருக்கையில அந்தக் கிழவி நான் கண்டு பிடித்த அதே விஷத்தினல் இறந்து விட்டிருக்கிருள் என்றால் நான் ஆச்சரியமும் திகைப்பும் அடையாமல் இருக்க முடியுமா? அந்தமாதிரி விஷம் இதுவரை வேறு எவராலும் கண்டு பிடிக்கப்படவில்லை என்பதும் நிச்சயம். ஆகவே நான் அதிகம் திடுக்கிட்டுப்போனேன்?

இதைக் கேட்ட ஹேமவதி சீமாட்டி, அதிக மனக் குழப்பத்தையும் பீதியையும் அடைந்தா ளென்றாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் 'அன்புள்ள குணசிங்கம் அவர்களே! இப்படிப்பட்ட நிலைமையில் இவ்வாறு நீங்கள் ஆச்சர்யமும் திகைப்பும் அடைவது சகஜம்தானே? என்று அநுதாபத்துடன் பேசுவதுபோல் கூறினள். அப்போது டாக்டர் மேலும் பேசுகையில், 'அந்தப் பிரேதத்தின் விவரத்தை அறிந்துகொள்ள வேண்டு மென்னும் எண்ணத்துடன் எனக்கு அப்பிரேதத்தைக் கொடுத்த ஆளிடம் சென்று விசாரித்ததில் அப்பிரேதம் இருந்த அடக்கப் பெட்டியின்மீதிருந்த பெயர் கண்டுபிடித்தோம். அங்கிருந்து நான் ஜனனமரணப் பதிவு காரியாலயம் சென்று விசாரித்ததில் மந்தரை என்னும் பெயரையுடைய அம்மாது கிருஷ்ணகிரிஜமீன்தாரணிக்கு சொந்தமான மாளிகையில் திடீரென்று இறந்துவிட்டாள் என்று தெரிந்தது. அக்கிழவியின் மரணத்தில் ஏதோ இரகசிய மிருக்க

வேண்டும்' என்று கூறினார். டாக்டர் கூறியதையெல்லாம் மிக்க பீதியுடன் கவனித்துக் கொண்டிருந்து உடனே, 'டாக்டர் அவர்களே! நீங்கள் கூறிய சங்கதியைக் கேட்டு நானும் அளவிலா ஆச்சர்யப் படுகிறேன். பாவம்! அம்மாது தற்கொலை செய்து கொண்டிருப்பாளோ என்னமோ தெரியவில்லை.' என்றதும் டாக்டர், 'அப்படியானால் நான் கூறும் அந்தப் புட்டி அப்பிரேதத்தின் அருகிலேனும் இருந்திருக்க வேண்டும். ஆனால் மரண விசாரணையில் அப்படியொன்று இருந்ததாக ருஜுவாகவில்லை. அந்த விஷத்தின் விசேஷம் என்னவென்றால் விஷத்தைச் சுவாசித்ததும் வேறு சிறு வேலைசெய்யும் சாவகாசமுமில்லாதபடி உடனே இறந்துவிடவேண்டியதுதான். ஆதலின் மந்தரை என்னும் அம்மாது பிறரால் கொல்லப்பட்டிருக்க வேண்டுமென்பது நிச்சயம்' என்றார். அப்போது ஹேமவதி சீமாட்டி அதிக திடுக்கிட்டவள்போல், 'ஓ, அப்படியா, கொலையா? அதுவும் என் மாளிகையிலா?' என்று கேட்டாள். அதற்கு டாக்டர் குணசிங்கம், 'அப்படித்தான் நடந்திருக்கிறதென்பதில் சந்தேகமேயில்லை. ஆயினும் அந்த விஷம் எப்படிப் பெறப்பட்டது என்பதுதான் எனக்கு விளங்காத் மர்மமாக இருக்கிறது. எனினும் நான் அதைத் திருடிச் சென்ற ஆளையும் கண்டு பிடித்துவிட்டேன் என்றே கூற வேண்டும். ஆனால் கடவுள் கிருபையால் நான் கண்டுபிடித்ததே சரியானதாக இருக்க வேண்டும். அந்தப் பெயரைச் சொல்ல நான் பயப்படுகிறேன். அதிலும் உன்னை நேரில் காணும்போது அப்பெயர் எப்படி சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை. சொர்ணம் என்பவளே ஹேமவதி சீமாட்டி என்பது எனக்கு இவ்வளவு காலம் தெரியாது. சொர்ணமாக இருந்தவளே அந்த விஷத்தை என்னிடமிருந்து திருடி இருக்கிறாள் என்பதில் ஆட்சேபமே யில்லை.

ஆகையால் நீயே அதைச் செய்தாய் என்பதில் சந்தேகமில்லை என்று கூறினர்.

இதைக்கேட்ட ஹேமவதி சீமாட்டி அதிக கோபமடைந்தாளென்றாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் அதிக வருத்தப்பட்டவள்போல், 'டாக்டர் குணசிங்கம் நான் அவ்வாறு கொலை செய்திருப்பேனென்று நீங்கள் நம்புகிறீர்களா?' என்று கேட்டாள். அப்போது அவர், 'அப்படியானால் அந்த சீசாவை நீ எடுத்துக்கொண்டு போனாய் என்பது நிச்சயமாக ஏற்படுகிறது. அதை அயோக்கியர்கள் யாரேனும் எடுத்துப் பயன்படுத்தி யிருப்பார்கள். நான் உன்னை அதிகம் மதித்தேனே. அதற்கேற்றபடி ஏதேனும் பதில் சொல். நீதானே எடுத்தாய் ?' என்றதும், அச் சீமாட்டி, அந்த டாக்டரின் கையை இறுகப் பிடித்துக்கொண்டு அன்பான முறையில், 'நான் எடுத்துச் சென்றேன் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதைத் திருடு என்று சொன்னால் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். உங்களைப்போன்ற ஒரு அன்பர் வீட்டிலிருந்து எடுத்துச் செல்வது திருட்டு ஆகாது. அந்த விஷயத்தைப்பற்றி ஆராயவே அதைக்கொண்டுவந்தேன். உங்களுடைய ஆராய்ச்சியில் நான் எவ்வளவு கவலையுடன் இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?' என்று ஏதோ சொல்லி முடிப்பதற்குள் டாக்டர், 'ஓ, நீதான் அதை எடுத்துக்கொண்டு வந்தாயா; உன் இந்த செயலைக்கண்டு பத்தொன்பது வருஷங்களுக்கு முன் நான் உனக்கு ஒரு விஷயத்தில் செய்த உதவிக்காக இப்போது மிகவும் வருந்துகின்றேன்' என்றதும் அச் சீமாட்டி இரு கையையும் குவித்துக்கொண்டு அதிக துக்கத்துடன், 'ஐயா, அதைப்பற்றி இப்போது ஒன்றும் பேசவேண்டாம். அவர்களுக்கும் காதுகள் இருக்கின்றனவோ என்று

அஞ்சவேண்டி யிருக்கிறது. சமீபத்தில் உங்கள் வீட்டுக்கு நான் வந்தபோதும் என்னுடைய இரகசிய விஷயத்தில் நீங்கள் தலையிடப் போவதில்லையென்று உறுதி கூறவில்லையா? அந்த வாக்குறுதியை மறக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன்' என்று கேட்டுக் கொண்டாள்.

அதற்கு டாக்டர், 'சரி, அப்படியானால் சிறிது நேரம் பழைய விஷயத்தை மறந்திருப்போம். இப்போதைய நிலைமையில் நாம் செய்யவேண்டியதென்ன? ஒரு கொலை நிகழ்த்தப் பட்டிருக்கிறது. அதுவும் என்னால் கண்டு பிடிக்கப்பட்ட விஷத்தைக் கொண்டு அது நடைபெற்றிருப்பதால் அதற்கொரு நீதி காணவேண்டியது எனது கடமையாக இருக்கிறது. இந்த விஷயத்தில் கடவுளே புகுந்து வேலைசெய்கிறார் என்று நம்புகிறேன். அந்தக் கொலையோ உன் மாளிகையில் நடந்திருக்கிறது. நீ அதைச் செய்ததாக நான் சொல்லவில்லை. அவ்வாறு நீ செய்திருக்கமாட்டாய் என்றும் நம்புகிறேன். ஆயினும் அதைச் செய்தவர்களைக் கண்டுபிடிப்பதில் நீ எனக்கு உதவி புரியவேண்டுமல்லவா?'' என்று கேட்டார். அப்போது ஹேமவதி சீமாட்டி, 'ஆ, இதெல்லாம் பயங்கரமாக இருக்கிறதே. இக்கொலையைப் பற்றிய சங்கதி வெளியாகுமானால் நான் அந்த விஷயத்தைத் திருடினேன் என்பதும், நடுராத்திரியில் தனியாக உங்கள் வீட்டுக்கு வந்தேன் என்பதும் வெளியாய் விடுமல்லவா?' அதனால் என் வாழ்வே அழிந்து விடாதா? இதைவிட என் மார்பில் ஒரு கத்தியைக் குத்திக் கொன்று விடலாமே' என்றாள். அவ்வாறு கூறியபோது அவள் டாக்டரின் முன் முழங்காலிட்டுப் பணிந்துவிடவில்லையென்றாலும் சோபாவில் அவர் அருகில் உட்கார்ந்தபடியே கெஞ்சிக் கேட்கும் தோரணையில் அதிக துக்கத்துடன் தன் ஹிருதயத்தின்மீது தன் கையை வைத்துக் காண்பித்தாள்.

அப்போது டாக்டர் குணசிங்கம் என்ன செய்வதென்று தோன்றுதவராய்த் தன் கையால் நெற்றியைப் பிடித்துக் கொண்டவண்ணம், 'ஆ, நான் இப்போது என்ன செய்வது?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டார். அதற்கு ஹேமவதி சீமாட்டி, 'இது ஒரு கஷ்டமான காரியமா? இந்த விஷயத்தை வெளிவிடாமல் அப்படியே மறைத்து விடுங்கள்' என்று யோசனை கூறினுள். உடனே அவர், 'அது முடியவே முடியாது, நான் இந்தக் குற்றத்தை வெளிக்குக் கொண்டுவாராமல் மறைக்கமுயன்றுல் நானும் அதற்கு உடன் பட்டவனுவேன். என் மனச்சாட்சி அப்படி நடந்துகொள் வதற்கு இடம் தராது. நீ உன் வீட்டில் யார்மீதேனும் இவ் விஷயத்தில் சந்தேகங்கொண்டிருக்கிருயா என்பதைத்தெரிவி. நீ அந்தப் பாஷாணத்தை வைத்துக்கொண்டிருப்பதை யாருக் கேனும் சொன்னுயா என்பதை யோசித்துப் பார், சொல்லி யிருக்கிருய் என்பதில் சந்தேகமில்லை. கொலை செய்யப்பட்ட அம்மாதின் ஆன்மா ஆகாயத்தினின்றும் பழி வாங்கவேண்டு மென்று முறையிடுவது எனக்கு நன்ருகக்கேட்கிறது. இதில் நீதியை வழங்கும்படி அந்த ஆகாயமே எனக்குக் கட்டளை யிட்டிருக்கிறது. அப்படிப்பட்ட விஷமொன்றைக் கண்டு பிடித்ததற்காக நானே தண்டனையை அனுபவிக்க வேண்டியவ ஞக இருக்கிறேன். இந்த விவகாரத்தில் உன் பெயரை இழுப் பதும் எனக்குச் சங்கடமாகத்தான் இருக்கிறது' என்று கூறி ஞர். அச்சமயம் சீமாட்டி அப்பிரபுவுக்குத் தன்னிடமுள்ள அன்பை ஆதாரமாகக்கொண்டு அவரை வழிக்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென்னும் எண்ணத்துடன், 'டாக்டர் அவர்களே! நீங்கள் ஒரு சமயம் என்னை அன்புடன் நேசித் தீர்களல்லவா? ஏன், அன்புக்கும் மேலாகவே என்னைப் பாவிக்கவில்லையா?' என்று கேட்டாள்.

அப்போது டாக்டரும், 'ஆம், அன்புக்கும் மேலாகவே உன்னை நேசித்தேன். இப்போதும் அப்படியே இருக்கிறேன். ஏனெனின் அந்தப்பாசம் என்றும் அழியாததாக இருக்கிறது. பத்தொன்பது வருஷங்களுக்குமுன் நான் உன்னை என்தாயாரின் வீட்டில் கண்டது முதலே உன் உருவம் என் மனதில் பதிந்து விட்டது அது எப்போதும் எக்காரணத்தைக் கொண்டும் மறைய மாட்டேன் என்கிறது. எனினும் நான் செய்யவேண்டிய கடமையைச் செய்துதானே ஆகவேண்டும். கடமையைச் செய்வதில் என்ன இடையூறுகளும் கஷ்டங்களும் நேரிட்டாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் கடமையைச் செய்வதே அறிவாளிகள் கடமை. இதில் உன் பெயர் இழுக்கப்படுகிறதே என்றுதான் சிறிது கவலைப் படுகிறேன். ஆயினும் வேறு வழியில்லையே? என் செய்வது' என்று கூறினர். அப்போது சீமாட்டி, 'ஐயா, நீங்கள் என்னை நேசித்ததாகவோ அல்லது நேசிப்பதாகவோ இனியும் கூற வேண்டாம். அவ்வாறு நீங்கள் நேசிக்க முடியாது. நேசிப்பது உண்மையாயின் இப்படியும் என்னை அல்லற்படுத்துவீர்களா?' என்று கேட்டாள். அதற்கு அவர், 'மாதே! இதில் உனக்கு என்ன கஷ்டமிருக்கிறதென்று எனக்கு ஒன்றும் தெரியவில்லை. உன்மீது இருவித புகார்கள் வரலாம். ஆனால் அவற்றைச் சமாளிப்பது கஷ்டமல்ல. முதலாவதாக நீ என் வீட்டுக்குத் தனியாக இரவில் வந்தாயே என்பது. அதற்கு உன் பரிசுத்த வாழ்வும் என் நல்லபெயரும் குறுக்கே இருந்து உனக்கு அபவாதம் ஏற்படாதபடி செய்துவிடும், மேலும் ஒரு சீமாட்டி ஒரு டாக்டரிடம் வேலையாகப் போவதில் ஆச்சர்யமென்ன இருக்கிறது? இரண்டாவதாக நீ அந்த விஷபுட்டியை எடுத்தாயே என்பது. அது விலையுயர்ந்த ஆபாரணமோ பொருளோ, பணமோ அல்ல. சாதாரண சமாசாரம். அதி

லுள்ள ஆச்சர்யத்துக்காகவே அதை எடுத்துச் சென்றதாகச் சொல்லிவிடலாம். ஆகவே இதனுலெல்லாம் ஹேமவதிசீமாட்டியின் கௌரவம் கெட்டுவிடாது' என்ருர்.

அப்போதும் சீமாட்டி அதிகம் கெஞ்சிக்கேட்கும் தோரணையில், 'ஐயா, எப்படியிருந்தாலும் இந்தச் சங்கதியை நீங்கள் அதிகம் வற்புறுத்தக் கூடாதென்றும், இதில் தலையிடாம விருந்துவிட வேண்டுமென்றும் மன்ருடிக் கேட்டுக் கொள்கிறேன்,' என்று கூறவும், டாக்டர் அச்சீமாட்டியின்மீதே சந்தேகங் கொண்டவர்போல் அதிக பிரமையுடன், ஓ, நீ இவ்வாறு கூறியதால் நான் என்னவென்று நினைப்பது? இப்படிப்பட்ட சந்தேகம் என் மனதில் இருக்கும்படி நீ செய்ய வேண்டாம். உன் நன்மைக்காகவே இந்த விவகாரத்திலுள்ள உண்மையை வெளிப் படுத்திவிடு' என்று கேட்க, அச் சீமாட்டி, 'ஐயா, நீங்கள் இச் சம்பாஷணையை இழுத்துக்கொண்டு போவதில் நான் மனங் கூசும்படி ஒரு விஷயத்தை வெளியிடவேண்டிய நிலைமையும் வந்துவிடும்போல் தோற்றுகிறதே' என்று கவலையுடன் கூறினுள். உடனே டாக்டர் குணசிங்கம், 'ஓ, அப்படியானுல் நான் கொண்ட சந்தேகம் உறுதிப்பட்டுவிட்டது' என்று மெல்லிய குரலில் சொன்னுர். அப்போது அச்சீமாட்டி வேறு விதியில்லாமல் அவர் முன் முழங்காலிட்டுப் பணிந்து, ஐயா, தாங்கள் ஒரு முறையேனும் என்னை நேசித்தது உண்மையே யாயின் என்னைத் தூக்கு மேடைக்கு அனுப்பத் தங்களுக்கு மனம் வருமா?' என்று கெஞ்சிக் கேட்டாள்.

இதைக் கேட்டதும் டாக்டர் குணசிங்கம் மனக்குழப்பமடைந்தவராய்த் தனக்கும் தெரியாமல் ஓவென்று அலறிவிட்டுத் தன் ஆசனத்தினின்றும் எழுந்து அவ்வறையிலேயே

மேலுங் கீழுமாக நடக்கலானார். சீமாட்டியும் எழுந்து அவரைத் தழுவிக் கொள்வதுபோல் கைகளை விரித்துக்கொண்டே 'கிருபை செய்யுங்கள், உயிர்ப் பிச்சை யளியுங்கள்' என்று கோரி நின்றாள். டாக்டர் குணசிங்கம் பிரமித்துப் போய்ச் சிறிது நேரம் அப்படியே நின்று தான் உண்மையாகவே மனமார நேசித்த அம்மாதின் முகத்தை உற்று நோக்கினார். பழையகால நினைவுகளெல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. வாலிபத்தில் அவள் இருந்த அழகையும், நடுத்தர வயதாகிய இப்போது அவளுடைய அழகு இன்னும் மலர்ந்திருப்பதையும் அவர் உணர்ந்தாரென்றாலும் முன்பு அவளிடம் தோன்றிய அந்தக் காதல் மட்டும் இப்போது தோன்றவில்லை. ஆயினும் தான் நேசித்த அம்மாது கொலை செய்யக்கூடிய குற்றவாளி என்பதை அறிந்தும் அவள் முன் நிற்காமல் ஓடிப்போகவோ அல்லது அவளைக் கண்டு நடுங்கவோ செய்யவில்லை. அவருக்கு அவளிடம் ஏற்பட்ட மோகம் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியும் என்னும் எண்ணத்துடன் ஏற்பட்டதல்ல. ஆயினும் அது அழியாத மோகமாக இயற்கையாக ஏற்பட்டது. மனித புத்தியே இதுவரை அறியாத அப்படிப்பட்ட அன்பாக அது இருந்ததென்றே கூறவேண்டும்.

டாக்டர் குணசிங்கம் இவ்வாறு பேசும்போது அவருடைய முகத்தோற்றத்தை ஹேமவதி சீமாட்டி நன்கு கவனித்து வந்தாள். அவளுடைய அனுபவத்திலிருந்து அவர் தன் பக்கம் திரும்பி வருகிறார் என்பதை அறிந்து கொண்டாள். ஆகவே வெற்றி பெற்றுவிடுவோமென்னும் தைரியம் அவள் மனதில் உதயமாயிற்று. டாக்டர் நீண்டநேர மௌனத்துக்குப் பின்னர் வாய் திறந்து, 'சீமாட்டி இதில் ஏதோ பயங்கரமான சந்தர்ப்பங்கள் இருந்திருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் நீ அப்படிப்பட்ட காரியத்தில் இறங்கியிருப்பாயா?' என்று கேட்டார். அதற்குச் சீமாட்டி, 'ஆம், பயங்கரமான சந்தர்ப்பங்களே. ஆயினும் அதையெல்லாம் சொல்லும்படி கட்டாயப் படுத்தாதீர்கள்' என்று கேட்க அவர், 'நீ சொல்லாவிட்டாலும் எனக்குத் தெரிகிறது. பத்தொன்பது வருஷங்களுக்கு முன் நீ என் தாயின் வீட்டில் வந்து தங்கியபோது உன்னுடன் வந்த வேலைக்காரிதானே அவள். ஆதலின் அவள் உன் இரகசியத்தை வெளியிடுவதாகப் பயமுறுத்தி யிருக்கலாம். அதே ரகசியத்தை நானும் அறிந்திருந்தபோதிலும் அதை வெளியிடுவதில்லை யென்று வாக்களித்திருக்கிறே னல்லவா?' என்றார். அதற்கு அச்சீமாட்டி, 'ஆம், தாங்கள் உண்மையை யூகித்து விட்டீர்கள் என்றே கூறவேண்டும். டாக்டர் அவர்களே! தாங்கள் பழையபடி எனது அன்பராகவும் நண்பராகவும் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் எனக்கு உயிர்ப் பிச்சையளித்து எனது மானத்தையும் காப்பாற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். தாமதம் செய்யாமல் உறுதி கூறுங்கள்' என்று கேட்டுக்கொண்டாள்.

அப்போது டாக்டர் புண்பட்ட மனத்துடன், ,சீமாட்டியே, உனக்காக நான் எனது அழியாத ஆன்மாவையே துன்பத்துக்குள்ளாக்க வேண்டியதாக இருக்கிறது. எக் காரணத்தைக் கொண்டேனும் உன்னைக் கஷ்டத்தில் சிக்கவைக்க நான் விரும்பவில்லை. ஆயினும் இதுவரை நடந்ததிலிருந்தேனும் ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டு எச்சரிக்கையாயிரு. கடவுள் சாட்சியாக இனியேனும் ஜாக்கிரதையாக இரு,' என்றார். அதற்கு அவள், 'அப்படியே ஆகட்டும், இனி ஜாக்கிரதையாக இருப்பேன்; உங்களுடைய உபதேசம் வீண் போகாது. நான் உங்கள் தயவில் சிக்கிக்கொண்டு விட்டேன்.

ஆதலால் உங்கள் இஷ்டப்படி நடக்க வேண்டியதே என் கடமையாக இருக்கிறது' என்றாள். அப்போது டாக்டர் குணசிங்கம், 'மாதே! நான் உனக்குக் கொடுத்த வாக்குறுதியினின்றும் தவறமாட்டேன். மரணப் படுக்கையில் இருக்கும் போதும் உனது இரகசியத்தை வெளியிட மாட்டேன். ஆனால் உனது குற்றங்களை மறைத்து வைப்பதற்காகக் கடவுள்தான் என்னைக் காப்பாற்றவேண்டும்,' என்றார். ஆகவே ஹேமவதி சீமாட்டி, 'சரி, இனி இந்த துக்க விஷயத்தைப் பேசவேண்டாம். நமது சம்பாஷணையை வேறு வழியாகத் திருப்புவோம். உங்களைப் போன்ற மனமார்ந்த அன்பரையல்லாமல் நான் வேறு யாரை எனது மாளிகையில் வரவேற்கப் போகிறேன். ஆதலின் நீங்கள் என் வீட்டில் விருந்து கொள்ளவேண்டும்' என்று கேட்டுக் கொண்டாள். அதற்கு டாக்டர், 'இல்லையம்மா! நான் இங்கே ஒருநிமிஷமும் இருக்க முடியாது. நாம் இருவரும் அதிகம் ஒருவரை யொருவர் பார்க்காமலிருப்பதே நல்லது. உன் இரகசியத்தை நான் அறிந்தவனாக இருப்பதால் என் எதிரில் இருப்பதும் உனக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். அதுபோலவே இவ்வளவு பெரிய குற்றவாளியாகிய உன் எதிரில் இருப்பதும் எனக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும்.' என்று கூறிக்கொண்டே மிக்க ஆர்வத்துடன் அவளுடைய கையைப்பிடித்து அழுத்தி விட்டு அவ்வறையினின்றும் வெளியே புறப்பட்டு விட்டார். இவ்வாறாக இந்தக் காட்சி முடிவடைந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் டாக்டர் குணசிங்கம் அம்மாளிகையை விட்டுப் புறப்பட்டார்.

அன்பர்காள்! பெண் என்றால் பேயும் இரங்குமல்லவா என்னும் பழமொழி இவ்விடத்தில் உண்மையாயிற்று. டாக்டர் குணசிங்கம் கொலையாளி யார் என்று கண்டு பிடித்துப்

பழி வாங்கவேண்டுமென்றும், அவ்வாறு செய்யாவிட்டால் தன் மனச்சாட்சி அதிகம் வருந்துமென்றும் கூறியும் அக் கொலையைச் செய்தது ஹேமவதி சீமாட்டியே என்று தெரிந்ததும் அவளுடைய மோக வலையில் சிக்கி அக்குற்றத்தை மறைக்க முன் வந்ததானது பெண்களிடத்தில் எப்படிப்பட்டவரும் அடிமைப் படுகின்றனர் என்பது தெளிவாகிறது. இந்த இடத்தில் மற்றொரு விசேஷமும் இருப்பதைக் கவனிக்க வேண்டியது அவசியமாகும். டாக்டர் குணசிங்கம் ஹேமவதியைப் பல ஆண்டுகளாகவே நேசித்து வந்தும், அவளுடைய இன்பத்தைப் பெறமுடியுமா என்பது சந்தேகமாகவே இருந்தும் அவர் அவளிடம் வெறுப்பு அடையாமல் மனமார அன்புடன் இருந்தானது உண்மைப் பற்றைக் காண்பிக்கிறது.

72-வது அத்தியாயம்

தினகரனின் துக்கம்

மேலே குறிப்பிட்ட சம்பவம் நிகழ்ந்த தினத்தில் மாலை தினகரம் பிரபு, இரத்தினபுரியிலுள்ள தனது மாளிகையில் தனியாக ஆகாரம் அருந்த உட்கார்ந்திருந்தான். அவன் அப்போது தனியாக இருந்தமையால் உற்சாக மற்றவனாகவும், மனக்குழப்ப மடைந்தவனாகவும் இருந்தான். அவன் அதிகம் நெருங்கி நட்புடன் இருந்தவனுடனும் சண்டை போட்டுவிட்டான். மற்ற நண்பர்களும் அவனுடைய அகங்காரத்தையும், வீண் பெருமையையும் நண்பர்களைத் துச்சமாகக் கருதும் சுபாவத்தையும் வெறுத்தவர்களாய் அவனிடம்

நெருங்குவதை விட்டு விட்டார்கள். அவனிடம் ஒரு நல்ல குணமாவது இருந்திருந்தால் அவனுடைய நண்பர்கள் அவனது செல்வத்துக்காகவேனும் அவனைப் பின் தொடர்ந்தே இருப்பார்கள். ஆயினும் தினகரன் அளவு கடந்த துஷ்டனுகவும், கர்வியாகவும் இருந்ததால் நண்பர்களெல்லாம் ஒருவர் பின் ஒருவராக அவனுடைய நட்பை யெல்லாம் விட்டு விட்டார்கள். ஆகவே அவன் அந்த நேரத்தில் தனியாகவே சாப்பிட வேண்டியதாயிற்று. அன்று காலை அவன் தன் நண்பர்கள் இரண்டொருவருக்குக் கடிதம் எழுதித் தன்னுடன் விருந்துக்கு வரும்படி கேட்டுக்கொண்டிருந்தான். அவர்கள் வரமுடியவில்லை யென்று தெரிவித்துவிட்டிருந்தார்களென்றும், மரியாதையரகவே பதில் அனுப்பிவிட்டிருந்தார்கள். ஆகலின் அவன் அவ்வேளையில் உற்சாகமற்றவனுக இருந்தான். இனிய மதுபானமும் அவனுக்கு அச்சமயத்தில் இன்பத்தைத் தரவில்லை, தனியே என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றுதவனுக இருந்தான். அவன் கமலகுமாரியுடன் மனஸ்தாபப்பட்டு மூன்று நாட்களாய் இருந்தன. பிரசித்தி பெற்ற நாவலாசிரியர்களின் புஸ்தகங்கள் வாசிப்பதிலும் இன்பம் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. சதா சர்வ காலமும் தன்னுடன் இருக்கக்கூடிய நண்பனுகிய சந்திரசேகரனையும் தன் காமக் கிழத்தியாகிய கமலகுமாரியையும் இழந்துவிட்டதற்காக அதாவது அவர்களுடன் சண்டை போட்டுக் கொண்டுவிட்டதற்காக அதிகம் மனம் வருந்தினுன். கமலகுமாரி இரத்தினபுரியை விட்டுச் சென்றதோ வழியில் கொலை செய்யப்பட்டுப் போனதோ அவனுக்குத் தெரியாது. அவ்விஷயம் இரத்தினபுரி பத்திரிகைகளிலும் வெளியாகக்கூடிய அவகாசம் இல்லை.

அப்போது தினகரன் மதுபானம் அருந்திக்கொண்டே,

தன் மனத்தில், 'எனது காதற் களஞ்சியமாகிய கமலகுமாரியைப் போய்ப் பார்ப்பதே சரி. அவளுடன் எப்படியாவது சமாதானம் செய்துகொள்ளவேண்டும். அவளைப்போன்ற அழகுடைய ஒரு பெண்மணி எனக்கு அகப்படுவது கஷ்டம். அவள் என்னைத் துரோகம் செய்தாலும் செய்து கொள்ளட்டும். அவளைப்போன்ற வியபிசாரிகளுக்கு அது சகஜம்தானே. ஜாதிமதங்களையோ, அந்தஸ்து வேற்றுமைகளையோ, அப்பன் பிள்ளை என்னும் உறவின் முறையையோ அவர்கள் பார்க்காமல் பணம் கிடைத்தால் போதுமென்று எல்லாருடனும் கூடிக் குலாவுவார்கள். ஒவ்வொருவரிடமும் அவர்தான் உண்மைக் காதலன் என்று உரைப்பார்கள். ஆகவே அதையெல்லாம் மறந்து எனக்கு அவள் இன்பம் தருகிறவரையில் சரி என்று நினைத்துக்கொண்டு அவளுடன் உறவாடவேண்டியதுதான். ஆதலின் நான் உடனே போய்ச் சமாதானம் செய்து கொள்கிறேன்' என்று எண்ணினான். இவ்வாறு தீர்மானித்ததும் அவன் மாளிகையை விட்டுப் புறப்பட்டு ஒரு வாடகை வண்டியை அமர்த்திக்கொண்டு கமலகுமாரியின் வீட்டிற்குச் சென்று சிறிது தூரத்திலேயே வண்டியை நிறுத்திவிட்டுத் தான் மட்டும் அவ்வீட்டின் வாயிற்படிக்குச் சென்று கதவைத் தட்டினான். அங்குள்ள சமையற்காரி கதவைத் திறந்ததும், அவன், 'கமலகுமாரி வீட்டில் இருக்கிறாளா?' எனக் கேட்க அம்மாது, 'பிரபுவே! எனது எஜமானி வீட்டிலில்லை. இரத்தினபுரியையே விட்டு வெளியூருக்குப் போயிருக்கிறாள்' என்றதும் தினகரன் ஆச்சர்யத்துடன், 'ஊரைவிட்டு வெளியிலா? எப்போது எங்கே யாருடன் போனாள், வேலைக்காரியும் உடன் சென்றிருக்கிறாளோ?' எனப் பரபரப்புடன் பல கேள்விகளைக் கேட்டான்.

அதற்கு அச்சமையல்காரி, 'பிரபுவே! தாங்கள் கடைசி

முறையாக இங்கு வந்துபோன தினத்துக்கு அடுத்த நாளே எனது எஜமானி தன் வேலைக்காரியுடன் புறப்பட்டுச் சென்றாள். அவள் கிருஷ்ணகிரிக்குப் போனதாகத் தெரிகிறது' என்று கூறியதும் பிரபு அதிக ஆச்சரியத்துடன், 'சந்திரசேகரம் பிரபுவுடனே?' என்று கேட்டதற்கு அச் சமையல்காரி, 'இல்லை, இல்லை. அவருடன் போகவில்லை. உண்மையைச் சொல்லவேண்டுமாயின் அன்று நீங்கள் வந்து போனபின் அவர் மறுபடியும் எப்படியோ மாடியின்மீது புகுந்து அவளுடன் ஏதோ தகராறு செய்ததில் இருவருக்கும் சச்சரவு ஏற்பட்டது' என்றாள். அப்போது தினகரம்பிரபு, 'ஓ, அப்படியா சமாசாரம். எது எப்படியாயினும் நான் கமல குமாரியுடன் சண்டைபோட்டது தவறுதான். அவளுடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டும். எதற்கும் நான் நாளையதினம் வருகிறேன்' என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான். தான் வந்தவண்டியிலேயே மறுபடியும் ஏறிக்கொண்டு வண்டியை இரத்தினபுரிக்குச் செலுத்தும்படி சொல்லிவிட்டுப் பல விஷயங்களைச் சிந்தித்தான். அப்போது அவன், 'நான் கிருஷ்ணகிரிக்குப்போய் விட்டிருப்பேன் என நினைத்து என்னைத்தேடிப் போயிருக்கிறாள்போலும்! அல்லது என்னைப்பற்றி என் தாயாரிடம் புகார் சொல்லப் போயிருக்க வேண்டும்; ஆனால் கமலகுமாரி அப்படி முட்டாள்தனமாக எந்தக் காரியத்தையும் ஆத்திரப்பட்டுச் செய்து விடுபவளல்ல. ஆதலின் இதில் ஏதோ விசேஷமிருக்கிறது. மர்மம் ஒன்றும் எனக்குப் புலனாகவில்லை. நானும் கிருஷ்ணகிரிக்குப் போவதானாலும் எனக்குத் தெரியாமல் அவள் திரும்பி விட்டால் என்ன செய்வது; ஆதலால் அவள் இங்கு வருகிறவரையில் காத்திருப்பதே நலம்' என்று நினைத்தான்.

இந்த முடிவுக்கு வந்தவுடனே, அவன் அன்று மாலைப்

பொழுதையெல்லாம் எவ்வாறு கழிப்பது என்பதில் கவலை செலுத்தினன். இரத்தினபுரி நகரிலுள்ள பொழுது போக்கும் இடங்களையெல்லாம் அவன் பார்த்துவிட்டிருக்கிறான். சினிமாவுக்கோ, நாடகத்துக்கோ, குஸ்திமுதலிய மல்யுத்தம் நடக்கும் இடங்களுக்கோ செல்ல அவனுக்கு மனம் வரவில்லை. நடனமாதர்கள் இல்லம் செல்லவும் அவன் விரும்பவில்லை. ஆச்சர்யப் பொருள்களும், பிராணிகளும் சேர்த்து வைக்கப் பட்டிருக்கும் பொருட்காட்சிகளுக்குச் செல்லவும் அவனுக்கு ஆசை தோன்றவில்லை. ஆகவே நீண்டநேர யோசனைக்குப் பின் செஷன்ஸ்கோர்ட் விசாரணை மிக்க ருசிகரமாக இருக்குமாதலின் அங்குச்சென்று சொற்ப நேரத்தைக் கழிக்கலாமென நினைத்து வண்டியை அவ்விடத்துக்குச் செலுத்தும்படி சொன்னான். சொற்பநேரத்துக்குள் வண்டியும் அங்குபோய்ச் சேர்ந்தது. அவன் அந்தக் கோர்ட்டில் சென்று விசிட்டர்களுக்கு எனப் போடப்பட்டிருக்கும் ஆசனத்தில் உட்கார்ந்தான். வக்கீல்களும் கட்சிக்காரர்களும், எதிரிகளும் நிரம்பியிருந்தார்கள், போலீஸ் சேவகர்களும், ஆர்டர்லிகளும் சுறுசுறுப்பாகத் தங்கள் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். திடீரென்று ஜட்ஜ் வந்ததால் சேவகன், 'சைலென்ஸ்; எழுந்திருங்கள்' என்றான். உடனே அங்கு நிசப்தம் ஏற்பட்டதுடன் எல்லோரும் எழுந்து நின்று வணங்கினர்கள். நீதிபதி தமது ஆசனத்தி லமரும்போது பொதுவாக எல்லாருக்கும் வணக்கம் செலுத்துவதுபோல் ஜாடை செய்துவிட்டு அமர்ந்தார். உடனே எல்லாரும் அவரவர்கள் ஆசனத்தி லுட்கார்ந்தனர். பிறகு வழக்கு விசாரணை தொடங்கியது. சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். வக்கீல்கள் தங்கள் திறமையைக் கொண்டு மிகச் சாமர்த்தியமாக வாதித்தார்கள். அப்போதெல்

லாம் நீதிபதியும் இடையிடையே குறுக்கிட்டுப் பல வேடிக்கையும், ஹாஸ்யமுமான பதங்களைப் பிரயோகித்து வழக்கு விசாரணையில் ஒருவித உற்சாகம் எல்லாருக்கும் ஏற்படும்படி செய்துகொண்டே யிருந்தார்.

இவ்வாறாக அந்தக் கோர்ட்டு கலையும்வரை தினகாம் பிரபு அங்கேயே இருந்துவிட்டுப்பிறகு ஒரு மதுபானக்கடைக்குச்சென்று வேண்டிய அளவு அருந்திவிட்டு வீடுபோய்ச் சேர்ந்தான். மறுநாள் காலை நீண்டநேரம்வரை அவன் தூங்கி விட்டான். பிறகு எழுந்து காலை ஆகாரத்துக்குப் போனபோதும் அவன் தலைவலியாலும், உற்சாகமின்மையாலும் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தான். அப்போது அங்கிருந்த மேஜையின்மீது அன்று காலை வெளியான பத்திரிகை கிடந்தது. அப் பத்திரிகையை எடுத்துப் பிரித்துப் பார்த்ததும் முதலில் கிருஷ்ணகிரிக்கு அருகில் ஆற்றோரத்தில் இரண்டு தினங்களுக்கு முன் நடந்த இரட்டைக் கொலையைப்பற்றிய செய்தி வெளியாயிருந்தது. அதை அவன் மிக்க சிரத்தையுடன் வாசித்தான். அவன் பயங்கரமும் கவலையும் பீதியும் அடைந்தான். அக் கொலையை யார் செய்திருப்பார்களென்பது பத்திரிகையிலும் காணப்படவில்லை. அவனுக்கும் தோன்றவில்லை ஆகவே அவன் உடனே மிக அவசரமாக ஆடைகளையணிந்து கொண்டு கமலகுமாரியின் வீட்டுக்குச் சென்றான். அங்கேயும் கமலகுமாரியும் அவளது வேலைக்காரியும் கொல்லப்பட்டுப்போன சமாச்சாரம் அப்போதுதான் எட்டி யிருந்தபடியால் சமையல்காரி, வேலைக்காரி, வண்டிக்காரன் எல்லாரும் ஒன்றாகக்கூடித் துக்கத்துடன் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்தனர். தினகரன் அங்குபோய்ச் சேர்ந்ததும் இறந்துபோன கமலத்தின் பந்துக்கள் பலர் அங்குச் சென்று

அந்த வீட்டையும் அதிலுள்ள சாமான்களையும் தங்கள் வச மாக்கிக் கொண்டனர். சொல்பமோ சம்பாஷணைக்குப் பின் னர் பந்துக்களில் ஒருவர் கிருஷ்ணகிரிக்குச் சென்று அப் பிரேதங்களைக் கொண்டுவந்து முறைப்படி அடக்கம் செய்வ தெனத் தீர்மானிக்கப்பட்டது. தினகரம் பிரபு அதிக துக்கத் துடனும் விசாரத்துடனும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட் டுத் தன் வீட்டையடைந்தான். கமலகுமாரி கொல்லப்பட் டுப்போன மர்மம் யாதாயிருக்கலாம் என்பதிலேயே அவன் புத்தி ஈடுபட்டது. எவ்வளவுதூரம் யோசித்தாலும் உண்மை யை அறிந்துகொள்ள முடியவில்லை.

பந்துக்கள் சொத்து பாத்தியதையை அடைய வந்து சேர்வது ஒருவிநோதம். ஆள்பிழைத்திருக்கும்போது அவளை லட்சியம் செய்யாமலும், சுக துக்கங்களைக் கவனியாமலும் இருந்துவிட்டு அவள் இறந்தபின்னர் மட்டும் எங்கிருந்தோ வந்து குதித்துப் பலதிறப்பட்ட பாத்தியதை எல்லாம்கொண் டாடி ஒப்பாரிட்டு அழுது சொத்துக்களைப் பங்கு போட்டுக் கொள்ள முன் வந்து விடும் உறவின் முறையினரைக் காணும் போததான் ஆச்சர்யமாக இருக்கிறது. அதிலும் கமல குமாரியின் நிலைமையைப் போன்றவர்களுக்குக் கஷ்டம் அதி கம். அவளுடைய பந்துக்களும் மற்றவர்களும் அவளை விப சாரி என்றும் கெட்டுப்போனவளென்றும் பலவாறு இழித் துக் கூறி அவள் வீட்டின் பக்கமே திரும்பியும் பார்க்கமாட் டார்கள். பந்துக்கள் அவள் வீட்டில் ஒருவேளை சாப்பிடுவ தும் இழுக்கு என்று நினைப்பார்கள். அவ்வளவு ஏன்? அவள் தங்கள் உறவினள் என்று சொல்லிக்கொள்ளவும் மனந்துணி யாமல் அவள் கஷ்டங்களுக்கும் துணை செய்யமாட்டார்கள். ஆனால் அவள் இறந்துபோனபிறகு மட்டும் அவள் விபசாரத்

தால் சம்பாதித்த பொருளைப் பங்கு போட்டுக்கொள்ள மட்டும் விரைந்தோடி வருவார்கள். உலகில் இது சகஜமாக இருக்கிறது. கமலகுமாரியைப் போன்ற நிலைமையிலுள்ளவர்களின் சொத்துக்களைப் பந்துக்கள் பங்கிட்டுக்கொள்ள இடமளிப்பதைவிட அவற்றைச் சர்க்கார் பறிமுதல் செய்து பொது ஸ்தாபனங்களுக்குக் கொடுத்து பொது நன்மைக்குப் பயன்படும்படி செய்வதே சிலாக்கியமான முறையாகும்.

——:(o):——

73-வது அத்தியாயம்

——:():——

செல்வநாதரின் சந்திப்புகள்

செல்வநாதர் என்னும் பெரியார் மூலக்கொத்தளத்தில் ஏதோ ஒரு ஓட்டலில் தங்கியிருந்ததாக நாம் ஆரம்பத்தில் அறிமுகம் செய்திருப்பது நண்பர்கள் ஞாபகத்தில் இருக்கலாம். ஆனால் அவர் கடைசிவரை அங்கேயே தங்கியிருக்கவில்லை. மேலே கூறிய அத்தியாயத்தில் சொல்லப்பட்ட விஷயம் நடந்ததற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் அவர் இரத்தினபுரி நகரின் ஓரத்தில் ஒரு சிறு குன்றின் ஓரமாக ஒரு பங்களாவை வாங்கி அதை மிகச் சிறப்பான முறையில் புதுப்பித்து அதில் வசித்து வந்தார். அம்மாளிகையில் எல்லாச் சாமான்களும் நவநவமாக நிரப்பப்பட்டிருந்தன. அவர் மோகனதாஸுடன் கிருஷ்ணகிரிக்குச் சென்று திரும்பிய சில தினங்களுக்குப் பின்னர் ஒரு நாள் பகல் சுமார் பன்னிரண்டு மணிக்குத் தமது வண்டியில் ஏறிக்கொண்டு அவரே தமது கோகிலத்துக்காகவென்று அமர்த்தி அதில் அவர்கள் வசிக்

கும்படி செய்திருந்த வீட்டுக்குச் சென்றார். அவர் அவ்வீட்டின்முன் போய் இறங்கியதும் கோகிலத்தின் சகோதரனை சங்கரன் என்னும் சிறுபையல் அவரை வரவேற்று வீட்டில் அழைத்துச் சென்றான். தாங்கமுடியாத நோய், வறுமை ஆகிய தொல்லைகளினின்றும் ஒருவாறு விலகிச் சந்தோஷத்துடன் இருந்த கோகிலத்தின் தாயார் அப்பெரியாரை அன்புடனும் மரியாதையுடன் வரவேற்று உபசரிக்கவே அவர், 'அம்மணி! சில தினங்களுக்கு முன் நீ பிரஸ்தாபித்த ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசவே இப்போது இங்கு வந்தேன்' என்று கூறியதும் அங்கிருந்த அறிவிலும், குணத்திலும் அழகிலும் சிறந்த கோகிலம் அவ்விடத்தை விட்டு வெளியே செல்ல முயன்றபோது செல்வநாதர், 'கோகிலம்! நீ வெளியே போகவேண்டாம். இந்தச் சம்பாஷணைக்கு நீயும் அவசியமாக இருக்க வேண்டியதாகத்தான் இருக்கிறது,' என்று சொல்லிவிட்டுச் சங்கரனைப் பார்த்து, 'குழந்தாய்! நீ மட்டும் தோட்டத்திற்குப் போய் விளையாடிக் கொண்டிரு. நான் போகும்போது உன்னைக் கூப்பிடுகிறேன்' என்று சொல்லித் தட்டிக் கொடுக்கவே அச் சிறுவனும் வெளியே போய் விட்டான்.

அப்போது செல்வநாதர் கோகிலத்தைக் கண்டு, 'பெண்ணே! இனி நான் என் கவனத்தையெல்லாம் உன் நன்மை விஷயத்தில் செலவிடப் போகிறேன். நான் உன்னுடைய கார்டியனாக இருப்பதால் உன் நன்மைகளைக் கவனிக்க வேண்டியது எனது கடமையாகும். உண்மையான காதல் விஷயத்தில் நீ சங்கோசப்பட வேண்டிய அவசியமேயில்லை. உன் காதல் விஷயம் முற்றுப்பெற்று நீ சுகமடைய வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை' என்று சொல்லிக்கொண்டே

கோகிலத்தின் தாயாரைப் பார்த்து, 'உனது குமாரியைத் துன்பப்படுத்திய தர்மலிங்கம் பிரபுவின் சொத்துக்களுக்கு உண்மை வாரிசுதாரனான சபாபதியை நீ பார்த்திருக்க மாட்டாய் என்று நினைக்கிறேன்' என்றார். அதற்கு அம்மாது, 'ஐயா, நீங்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்துவதற்கு முன்பாக நான் எதிலும் தலையிடக் கூடாதென்று நீங்கள் சொன்னது ஞாபகமில்லையா? எங்கள் குடும்ப விஷயத்தில் இவ்வளவு சிரத்தைகொண்ட தாங்கள் இருக்கும்போது நான் ஏன் இதற்காகவெல்லாம் கவலைப்படவேண்டும்.' என்று பெருந்தன்மையுடன் கூறினாள். அப்போது செல்வநாதர் கோகிலத்தைப் பார்த்து, 'குழந்தாய்! சபாபதி தங்கியிருக்கும் அந்த இடம் சமீபத்தில் இருப்பதாகவும் நீ இரண்டொரு முறை அங்குச் சென்றிருப்பதாகவும் சொன்னாயல்லவா?' என்றுகேட்கவும் அவளது தாயார், 'ஆம், கோகிலம் இரண்டு மூன்று தடவை அவ்விடத்துக்குப் போய் இருந்தாள். அவள் அவ்வாறு போவதற்கு நீங்களும் சம்மதித்ததாகத் தெரிகிறதே' என்றார்.

அதற்குச் செல்வநாதர், 'ஆம், கோகிலம் அந்த இடத்துக்குச் செல்வதில் குற்றமெதுவுமில்லை, அவ்வீட்டின் சொந்தக்காரியாகிய சந்திராபாய் கோகிலத்தை அந்தப் பாழும் சமுத்திரவிலாச மாளிகையினின்றும் விடுவிப்பதில் அதிக சிரமம் எடுத்துக் கொண்டாள். அவளைப் பார்க்க நானும் மிக ஆவலுடையவனாகவே இருக்கிறேன். ஆயினும் அவர்கள் புதுக்கோட்டைக்குப் போவதாகக் கோகிலம் சில தினங்களுக்குமுன் சொன்னாள்.' என்றதும் கோகிலம் அதிக வெட்கத்துடன், 'ஆம், நான் அவ்வாறு சொன்னது வாஸ்தவம் தான். ஆனால் தர்மலிங்கம்பிரபுவின் சகோதரான சுகானந்தம்

பிரபுவின் குமாரரும் அந்த ஆஸ்திகளுக்கு உரியவருமான சபாபதி மட்டும் மறுபடியும் நோயால் வருந்தியதால் அவரை அழைத்துச்செல்ல முடியாமற்போக அவர்கள் பிரயாணத்தையே ஒத்திவைத்து விட்டனர்' என்று மெதுவான குரலில் சொன்னாள். உடனே அவள் தாயாரும், 'ஐயா, நமது கோகிலம் சபாபதியை அதிகம் நேசிக்கின்றாள். அவரைக் காணும்போதெல்லாம் அவளுக்கு அவரிடம் அன்பும் விசுவாசமும் அதிகமாகிறது' என்றாள். அதற்குச் செல்வநாதர் 'அது இயற்கைதான். இதில் ஆச்சர்யமொன்றுமில்லை. ஆயினும் சபாபதி அதிக காயலாவாக இருப்பதாக கோகிலம் சொல்கிறாளே' என்று சொன்னபோது கோகிலம் மீண்டும் அடக்கத்துடனும் சங்கோசத்துடனும், 'அவர் நன்றாக ஸ்மரணை பெற்றுவிட்டார். மூளைக்குழப்பமோ மனக்குழப்பமோ சிறிதும் இல்லை. ஆனால் தேக வலிமைதான் இன்னும் பெறவில்லை. மிக்க பலஹீனத்துடன் இருக்கிறார். ஆதலால் அவர் அதிக தூரப்பிரயாணம் செய்யலாகாதென டாக்டர்கள் சொன்னதால் பிரயாணத்தை நிறுத்திவிட்டார். சந்திராபாயும் அவளுடைய சகோதரனும் அவரை மிக்க ஜாக்கிரதையுடன் கவனித்து வருகிறார்கள்' என்று கூறினாள்.

அதைக் கேட்டதும் செல்வநாதர் அதிக ஆச்சர்யத்துடன், 'அவளுடைய சகோதரனா? அவளுக்கு ஒரு சகோதரன் இருப்பதாக நீ இதற்குமுன் சொன்னதாக எனக்கு ஞாபகமில்லையே. அவன் யார்? அவனுக்கு என்ன வேலை? உனது சபாபதி நற்காலமாக நல்லவர்களிடமே தங்கும்படி நேரிட்டதுபோலத் தெரிகிறது' என்றார். அதற்குக் கோகிலம், 'அதில் எள்ளளவு சந்தேகமும் இல்லை. சந்திராபாய் அவரைத் தன் சொந்த சகோதரர்போல் பாவித்து நடத்துகிறாள். அவளுடைய சகோதரனை மோகன சுந்தரமும்,' என்று கூறி

முடிக்குமுன் பெரியார், ஆ, என்ன பெயர் சொன்னுய்? அவனுக்கு என்னவேலே, வயது என்ன இருக்கும்; அந்த சந்திராபாய்க்கும் வயது என்ன இருக்கும்' என்று கேட்க, கோகிலம், 'சந்திராபாயின் வயது இருபத்தாறு இருக்கும்; மோகன சுந்தரத்தின் வயது பதினெட்டு இருக்கலாம். சந்திராபாய் பணக்காரி என்றே தெரிகிறது. ஆனு லவளுடைய சகோதரன் மட்டும் அவளேயே நம்பியிருக்கிருன். அவன் சொற்ப தினங்களுக்கு முன் வரை ஹேமவதி சீமாட்டியின் மாளிகையில் ஒரு வேலேக்காரனுக இருந்ததாகத் தெரிகிறது,' என்றதும் செல்வநாதர், 'என்ன! ஹேமவதி சீமாட்டியிடம் வேலேக்காரனு? நான் அவர்களிருவரையும் உடனே பார்க்க வேண்டும். நான் இவ்வாறு சொல்வதால் உன்னுடைய காதல் விஷயத்தில் ஏதோ முட்டுக்கட்டை போடப் போவதாக நினேக்கவேண்டாம். உன் நன்மைக்காகவே நான் அவர்களேயும் பார்க்க விரும்புகிறேன். நீ சொன்னவைகளெல்லாம் உண்மையாக இருக்கவேண்டுமென்பதே என் அவா' என்ருர்.

அதற்குக் கோகிலம், 'என தன்புள்ள ஐயா, எனக்கு ஒரு பொய்யேனும் சொல்லத் தெரியாதே. அப்படியிருக்கும் போது இப்போது நான் கூறியனவெல்லாம் உண்மையாக இருக்கவேண்டும் என்று சொல்வதன் அர்த்தமென்ன' என்று கேட்க, அப்பெரியார், 'குழந்தாய்! நீ பொய் சொல்லமாட்டாய் என்பது எனக்கு மனத்திருப்தியாக நிச்சயமாகத் தெரியும். ஆகவே நீ சொன்னதெல்லாம் உண்மைதானு என்று நான் திடமாக விசாரிக்கப் போவதில்லே. ஆயினும் இவற்றையெல்லாம் நீ நம்புகிறபடியே அவை இருந்துவிட வேண்டும் என்று அபேட்சிக்கிறேன். நீ சபாபதி என்று சொல்கிருயே அவனுடைய சிற்றப்பனே நான் பார்த்திருக்கி

றேன். அந்த மனிதனைப்பற்றி நான் அறிந்தது அவனுடைய கௌரவத்துக்கு ஏற்றதாக இல்லை. பல வருஷங்களுக்குமுன் நான் அவனைப் பார்த்தேன். ஏன் அந்த சபாபதி என்பவனையும் நான் பார்த்திருப்பதாகவே நினைக்கிறேன்' என்று கூறியதும் கோகிலம் அதிக ஆச்சர்யத்துடனும் சந்தோஷத்துடனும், 'ஓ நீங்கள் அவரைப் பார்த்திருக்கிறீர்களா?' என்று கேட்க அப்பெரியார், 'ஆம், நான் அவனைச் சிறு பிராயத்தில் பார்த்திருக்கிறேன். நான் பார்க்கும்போது அவனுக்குப் பன்னிரண்டு வயது இருக்கும். நான் பார்த்து பதினறு வருஷங்களுக்கு மேலாகிவிட்டது.' என்று சொன்னதும் கோகிலம் இன்னும் அதிக சந்தோஷத்துடன், 'பன்னிரண்டும் பதினறும் இருபத்தெட்டு, சபாபதிக்கும் இப்போது இருபத்தெட்டு வயதுதான் இருக்கும்' என்றாள். அப்போது செல்வநாதர், 'பெண்ணே நீ அவனைப்பற்றிப் பேசும் தோரணையிலிருந்தே அவனை நீ அதிகம் நேசிக்கிறாய் என்பது நன்றாகத் தெரிகிறது. ஆகவே அவன் உண்மையில் தர்மலிங்கம் பிரபுவின் சொத்துக்களையடையும் உரிமையில்லாதவனாகவே இருந்தாலும் வேறு தக்க யோக்கியதையேனும் இருந்தால் போதும். அவனையே உனக்குக் கணவனாக ஏற்பாடு செய்துவிடலாம்' என்று கூறினார்.

அப்போது கோகிலம் தன் கண்களினின்றும் நீர் வடிய, 'ஐயா, அவர் சென்ற பதினறு வருஷங்களாகச் சிறைபோன்ற அந்த சமுத்திரவிலாச மாளிகையின் இருட்டறையில் பட்ட கஷ்டங்களையெல்லாம் கவனிக்கும்போது அவருக்கு இந்த உலக வாழ்க்கையின் சூதும் வஞ்சனையும் எதுவுமே தெரியாது என்பது நன்றாக ஏற்படும்' என்று கூறச் செல்வநாதரும், 'ஆம், அக்கட்டடத்தில் அவன் பதினறு வருஷகாலம் அடைபட்டு இருந்ததொன்றே அவன் அந்த ஆஸ்திக்கு உரியவனே

என்பது நன்கு வெளியாகிறது. சபாபதியின் சிற்றப்பன் எவ்வளவு பெரிய பாவம் செய்துவிட்டான்! இருக்கட்டும். இப்போது நான் இங்கே காலதாமதம் செய்யக்கூடாது. நான் போய் வருகிறேன். வீட்டுக்குத் திரும்பும்போது நான் இங்கு வந்து போகிறேன்' என்று கூறிக்கொண்டே அவர் அவ்வீட்டை விட்டுப் புறப்பட்டார். உடனே அவர் தம் வண்டியில் எறிக்கொண்டு இந்திராபாயின் அழகிய மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தார். அது மிக்க சமீபத்திலேயே இருந்தது. இவ்விடத்தில் நேயர்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வரவேண்டிய விஷயமொன்று உண்டு. அதாவது கோகிலம் தன் தாயினிடமேனும் அல்லது செல்வநாதரிடமேனும் தான் சமுத்திரவிலாச மாளிகையினின்றும் விடுவிக்கப்பட்டபோது சந்திராபாய் என்னும் பெயரையுடைய இந்திராபாய் அங்குக் கொள்ளையடித்ததைச் சொல்லவே இல்லை. சந்திராபாய் அதை வெளியிடக் கூடாதென்று கோகிலத்தினிடம் சொல்லியிருந்தபடியால் கோகிலமும் அதை யாரிடமும் சொல்லவில்லை. ஆகவே இந்திராபாயின் இந்த வகையான நடத்தையைப் பற்றிச் செல்வநாதருக்கு ஒன்றும் தெரியாது.

செல்வநாதர் இந்திராபாயின் வீட்டை யடைந்ததும் வேலைக்காரி அவர் யாரென்று விசாரிக்க அவர் தன் பெயரைக் கூறியதும், முன்னரே கோகிலத்தின் மூலம் அங்குள்ளவர்களெல்லாம் அவரைப்பற்றி அறிந்திருந்தபடியால் மிக மரியாதையுடன் வரவேற்றார்கள். இந்திராபாயும் அவளுடைய சகோதரனாகிய மோகனசுந்தரமும் ஒரு தனியறையில் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். செல்வநாதரும் அவ்வறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவரைக் கண்டதும் சகோதரியும் சகோதரனும் எழுந்து நின்று மரியாதை செய்தார்கள்.

அவர் ஒன்றும் பேசாமல் அவர்களைக் கூர்ந்து நோக்கியதைக் கண்ட அவர்கள் ஆச்சர்ய மடைந்தனர். மேலும் அவர் திடீரென்று ஏதோ மயக்கமடைபவர் போலாகித் தண்ணீர் கேட்டார். உடனே இந்திராபாயும் ஒரு கோப்பை ஜலம் கொண்டுவந்து கொடுக்க அதை அவர் பருகியானதும், 'நான் சிரமம் கொடுத்ததற்காக என்னை மன்னித்துவிடுங்கள். மயக்கம் வருவதுபோல் இருந்ததால் உங்களுக்குச் சிரமம் கொடுக்க வேண்டியதாயிற்று' என்றதும் இந்திராபாய் அன்பான குரலில், 'இது ஒரு சிரமமா? இப்போது உங்கள் தேகநிலை எப்படி இருக்கிறது. எங்களால் ஆகவேண்டிய உபகாரம் ஏதேனும் இருக்கிறதோ' என்று கேட்டுக்கொண்டிருக்கும்போதே மோகனசுந்தரம் மற்றொரு அறைக்கு ஓடிப்போய் ஒரு கோப்பை நிறைய ஒயினைக் கொண்டுவந்தான். அதனைக்கண்ட அப்பெரியார், 'எனக்கு அது வேண்டாம். பகல் நேரங்களில் நான் அதைச் சாப்பிடுவதில்லை. எனக்கு இப்போது தேகநிலையில் சௌகரியமே அதிருக்கட்டும். உங்கள் விருந்தாளியாக இங்கு தங்கியுள்ள சமுத்திரவிலாச மாளிகையில் அடைபட்டுக் கிடந்த சபாபதி எங்கே?' என்று கேட்டார்.

அதற்கு மோகனசுந்தரம், 'அவர் சற்று நேரத்துக்கு முன்வரை எங்களுடன் இங்கேதான் பேசிக்கொண்டிருந்தார். இப்போதுதான் தனது அறைக்குச் சென்றார். நான் போய் அழைத்துவருகிறேன்' என்றான். அதற்கு அப்பெரியார், 'வேண்டாம், உடனே போய் அவனைக் கூப்பிடாதே. நான் உங்களிருவரிடம் மட்டுமே சிறிது பேசவேண்டி யிருக்கிறது' என்று கூறிவிட்டு அவர்கள் இருவரையும் பலமுறை விறைத்துப் பார்த்தார். அதிலும் இந்திராபாயையே அதிகம் உற்று நோக்கி இந்திராபாயின் கையைப் பிடித்துக்கொண்டு அதை ஆர்வத்துடன் அழுத்தியவண்ணம், 'பெண்ணே! நான் சிரத்

தை கொண்டுள்ள ஒரு பெண்ணைக் காப்பதில் நீ அதிக சிரமத்தை எடுத்துக் கொண்டிருக்கிறாய். அதற்காக நான் உனக்கு இப்போது வந்தனம் செலுத்துகிறேன்,' என்று சொல்லிவிட்டு மோகனசுந்தரத்தின் கையையும் பிடித்து அன்புடன் அழுத்தினர். செல்வநாதர் பார்ப்பதற்கு ஏதோ விசித்திரமான சுபாவங்களை யுடையவர்போலக் காணப்பட்டாலும் அதிக தாராள சிந்தையும் நல்லெண்ணமும் உடையவர் என்பதைக் கோகிலத்தின்மூலம் அறிந்தவர்களானபடியால் அவர் நடந்துகொண்ட தோரணையைக் கண்டு அச் சகோதர சகோதரிகள் ஆச்சர்யப்படவில்லை. கள்ளங்கபடமில்லாமல் அவருடன் தாராளமாக நடந்து கொள்ளலாம் என்பதை உணர்ந்தார்கள். அதுமட்டுமா? அப்பெரியார் அவர்களிருவரையும் தொட்டதுமே அவர்களுக்கு அவரிடம் ஒருவித அபிமானமும் மரியாதையும் எற்படலாயிற்று. அப்போது அப்பெரியாரே வாய் திறந்து, 'நீங்கள் என் தோரணையைப் பார்த்து ஆச்சர்யப்படலாம். ஆயினும் நான் உங்களுக்குச் சில கேள்விகளைக் கேட்பதைக் கண்டு என்னை ஒரு அதிகப் பிரசங்கி என்று நீங்கள் நினைக்கமாட்டீர்கள் எனக் கருதுகிறேன். உங்களுடைய நன்மைக்காகவே நான் உங்கள் விஷயத்தில் தலையிடுகிறேன் என்பதையும் நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். மோகன சுந்தரம்! நீ ஹேமவதி சீமாட்டியின் வேலைக்காரனாக இருந்தாயல்லவா?' என்று கேட்டார்.

அப்போது அவன் அதிக ஆச்சர்யத்துடன், ஆம் 'சீமாட்டியிடம் வேலை செய்ததுடன் இரத்தினபுரி அரசாங்க தர்பாரிலும் வேலைசெய்திருக்கிறேன்' என்றான். அப்போது செல்வநாதர், 'அரசாங்க தர்பாரிலுமா வேலை செய்தாய். யார் சிபார்சின்மீது உனக்கு அங்கு வேலை கிடைத்தது என்பதைச் சொல்வாயா ?' என்று கேட்டபோது என்ன செய்வதென்று

தெரியாமல் தன் சகோதரியின் முகத்தை நோக்கவே அவள், 'ஐயா, எனது சகோதரன் பஞ்சநதம் பிரபுவின் மூலமே அந்த வேலையையும், ஹேமவதி சீமாட்டியிடம் செய்த வேலையையும் பெற்முன் என்று நினைப்பதற்குத் தக்க காரணங்கள் இருக்கின்றன,' என்றதும் அவர், 'ஓ, பஞ்சநதம் பிரபுவா? அது இருக்கட்டும், உனக்கு ஏதோ பண வருவாய் இருப்பது போலத் தெரிகிறதே. உண்மையை மறைக்காமல் விஷயத்தைச் சொல்' என்று கேட்டார். அப்போது இந்திராபாய் பதில்சொல்ல முடியாமல் வெட்கப்படவே அப்பெரியார், 'அம்மணி! நீ ஏன் வெட்கப்படுகிருய். பெண் என்னும் முறையில் நீ ஏதேனும் தவறு இழைத்துவிட்டாயோ அதனுல் அவமானப்படவேண்டி யிருக்கிறதோ?' என்று கேட்க இந்திராபாய் சிறிதும் குற்றமற்றவள்போலும், கற்பிற்சிறந்தவள்போலும் உணர்ச்சிகொண்டு, 'பெரியாரே! நான் சத்தியமாகக் கூறுகிறேன். நான் அவமானப்படவேண்டிய விதமாகப் பெண் என்னும் முறையில் எப்படிப்பட்ட தவறுதலையும் இழைத்துவிடவில்லை,' என்று தைரியமாகக் கூறினுள்.

அதைக்கேட்ட செல்வநாதர் அதிக சந்தோஷமடைந்ததுடன் அவரது கண்களில் நீர் ததும்பிற்று. அதைக்கண்ட அந்தச் சகோதரனும் சகோதரியும் யாரோ அன்னியரான பெரியவர் தங்கள் விஷயத்தில் இவ்வுலக சம்பந்தமாக மட்டுமல்லாமல் ஆன்மார்த்தநிலையிலும் விசேஷ சிரத்தை செலுத்தியிருப்பதை யறிந்து ஆச்சர்யமும் சந்தோஷமும் அடைந்தனர். அப்போது செல்வநாதர் இந்திராபாயைப் பார்த்து, 'பெண்ணே, நான் எதையும் வேடிக்கைக்காகக் கேட்கவில்லை; ஆதலால் நீ சிறிதும் உள்ளதை மறைக்காமல் உண்மையையே விவரமாக என்னிடம் கூறு. உனக்கு ஏதோ பொருள் கிடைத்திருக்க வேண்டும். அது எவ்வளவு என்பது

பற்றிச் சொல்' என்று கேட்கவும் அவள் முதலில் சிறிது இஷ்டமில்லாதவள் போல் ஜாடை காட்டினுளென்ருலும் அவரே எல்லா விஷயங்களையும் அறிந்தவர்போல் கேட்பதிலிருந்து அவரிடம் எதையும் மறைக்கலாகாதென நினைத்து, 'ஐயா, நான் ஐயாயிரம் பவுன்களைப் பெற்றேன். அதுமட்டுமா, ஒரு கனவானின் செயல் காரணமாக மூன்று மாதத்துக் கொரு முறை இரத்தினபுரியிலுள்ள ஒரு வக்கீலின் மூலம் நூறு பவுன்களைப் பெற்று வருகிறேன்.' என்று கூறியதும் அவர் 'ஒரு கனவானின் செயல் காரணமாக என்ருயே. அந்தக் கனவானின் பெயர் என்ன? உடனே சொல். அதையும் நான் நல்லெண்ணத்துடனேயே கேட்கிறேன் என்பது உன் ஞாபகத்திலிருக்கட்டும்.' என்ருர்.

அதற்கு அப்பெண்மணி, 'ஐயா, அப்பெயரை நான் உங்களிடம் மறைக்க வேண்டிய அவசியமில்லை. அவர்தான் பச்சையப்பர்' என்றதும் செல்வநாதர் வெறுப்புடன், 'அந்த அயோக்கியப் பையலா? கிடக்கட்டும். உனக்குக் கலியாணம் முடிந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. உன் கணவனின் பெயர் என்ன?' என்று கேட்கவும், இந்திராபாய் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை வெட்கமடைந்து எத்தகைய பதிலும் சொல்ல முடியாமல் மெளனமாக நின்ருள். அப்போது அவளுடைய சகோதரனை மோகனசுந்தரம் அவரிடம், 'ஐயா, பெரியாரே! தாங்கள் கேட்கும் கேள்விகள் என் சகோதரிக்கு ஏற்றவைகளாக இல்லை என்று சொல்ல வேண்டியிருப்பதற்காக என்னை மன்னிக்கவேண்டும்' என்ருன். அப்போது செல்வநாதர், 'மக்களே! நான் வேண்டுமென்றே உங்களில் எவருடைய மனத்தையும் புண்படுத்த விரும்பவில்லை. இந்திராபாய்! நான் சொல்வதைக் கேள். நீ பெண் என்னும் முறையில் வெட்கமடையத்தக்க காரியம் ஒன்றும் செய்துவிட

வில்லையென்று உறுதி கூறினாய் அல்லவா? அப்படியிருக்கும் போது உன் கணவனைப் பற்றிப் பேசுவதில் தவறு என்ன? அவன் இறந்துபோயிருந்து அதனால் நீ துக்கப்படுவதாயின் நானும் உனக்கு அனுதாபம் காண்பிப்பேன். அவ்வாறின்றி நீ அவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்தால் நீ கூறுகிறபடி உன் வாழ்க்கை பரிசுத்தமானதா யிருப்பின் அது உன் குற்றமாக இருக்க முடியாது. நீ பரிசுத்தமான வாழ்க்கை யுடையவள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஆதலின் நீ எதையும் தைரியமாகச் சொல்லலாம்,' என்றதும் இந்திராபாய் சிறிது உணர்ச்சியை அடைந்து, 'ஆம், பெண்என்னும் முறையில் வெட்கிக்கத்தக்க காரியம் எதையும் நான் செய்யவில்லை என்று பலமுறையும் உறுதிகூற முடியும் ஆனால் என் வாழ்க்கையிலும் சில குறைகள் இருக்கவே செய்கின்றன. எனினும் நான் கற்பினின்றும் ஒரு சிறிதும் தவறிவிடவில்லை யென்று மட்டும் சத்தியம் செய்வேன்' என்றாள். உடனே மோகன சுந்தரமும், 'பெரியாரே! என் சகோதரி ஒருவரை மணந்துகொண்டாளென்பது நிச்சயமே. ஆயினும் அவள் அவனுடன் ஒரு நிமிஷம்கூட வாழவில்லை. கலியாணம் என்னும் அந்தச் சடங்கே நடவாமல் இருந்தால் அவள் எப்படி இருந்திருப்பாளோ அப்படியே இன்னும் இருக்கிறாள்,' என்றான்.

அப்போது செல்வநாதர் சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருந்த அழகிற் சிறந்த இந்திராபாயை உற்று நோக்கி, 'பெண்ணே! இப்போது உன் சகோதரன் கூறிய செய்தி ஆச்சர்யமானதாகத்தான் இருக்கிறது. உன் கணவன் பெயர் என்ன? அவன் தொழில் யாது?' என்று கேட்க, அப்பெண் மணி, 'ஐயா, பெரியாரே! தாங்கள் உள்ளன்புடனேயே கேட்கிறீர்களென்று புலனாவதால் உடனே பதில் சொல்லவேண்டு

மென்றுதான் தோன்றுகிறது. நான் யாரை மணந்துகொண்டேனோ அவன் பெயரைச் சொல்வதில் எத்தகைய ஆட்சேபமுமில்லை. ஆயினும் அதனால் நான் நல்லவளென்று கேள்விப்பட்ட ஒரு பெண்மணிக்கு ஏதேனும் தொந்தரை விளையுமோ என்று அஞ்சுகிறேன்' என்றதும் அவர் 'அந்த விஷயத்தில் எவ்வளவு இரகசியமாக நடந்துகொள்ளவேண்டுமோ அவ்வளவும் ஜாக்கிரதையாக இருப்பேன். நான் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் என்பது உனக்குத் தெரிந்ததுதானே' என்று கூறவே அவள், 'ஐயா, நான் தங்களை அதிகமாகவே மதிக்கின்றேன். மேலும் உங்கள் கேள்விகளுக் கெல்லாம் பதில் சொல்லவேண்டு மென்னும் உணர்ச்சி எனக்கும் தெரியாமலே உண்டாகிறது. ஆதலின் எல்லாவற்றையும் வெளிச்சமாகச் சொல்லிவிடுகிறேன் கேளுங்கள். நான் மணந்துகொண்டது துளசிங்கம் பிரபுவை.' என்று கூறி முடிக்குமுன்னர் பெரியார், 'ஓ, அவனா! ஹேமவதி சீமாட்டியின் குமாரியான கற்பகவல்லியை அடித்துக்கொண்டு போய்விட்டதாகப் புகார் வந்திருக்கிறதே, இந்தப் பேர்வழிதானே' என்றதற்கு அவள், 'அப்படிச் சொல்லாதீர். அவன் அவளை விவாகம் செய்து கொண்டு விட்டான். ஆதலின் அவர்களிருவரும் கணவனும் மனைவியுமாக இருக்கிறார்கள்' என்றாள்.

அதைக்கேட்ட பெரியார் ஆச்சர்யத்துடன், 'கலியாணமாய்விட்டதா? அதெப்படி முடியும். உன்னை முதலாவதாக விவாகம் செய்துகொண்ட அவன் மீண்டும் அவளை விவாகம் செய்து கொள்வதெப்படி?' என்று கேட்கவே அவள் நிதானமாக, 'ஆம், அவன் என்னை விவாகம் செய்துகொண்ட தென்பது உண்மையே. ஆயினும் நான் அவனை விடுதலை செய்துவிட்டேன். அவனை நான் நேசிக்கவுமில்லை. மேலும் நேசம் என்பது என்ன என்பதையும் நான் அறியேன். அவனை நான்

பொருட் படுத்தவுமில்லை. அவன் என்னை நேசித்திருந்தால் அதற்காக நான் அனுதாபப்படுகிறேன். பல நாட்களாகப் பிரிந்திருந்த பின்னர் சில வாரங்களுக்கு முன்புதான் நான் அவனைச் சந்திக்க நேர்ந்தது. விவாகம் என்னும் சடங்கு நடந்தபோது பார்த்ததுதான். பிறகு அந்த சந்திப்பில்தான் பார்த்தேன். அவன் தன் இரகசியங்களையெல்லாம் என்னிடம் சொல்லிக்கொண்டதன் பேரில் விவாக சம்பந்தமான எல்லா தஸ்தாவேஜ்களையும் அவனிடம் கொடுத்து விடுவதாக ஒப்புக்கொண்டேன். ஆனால் நான் அவனை மறுபடியும் சந்திக்கவில்லை. குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் ஒரு ஆளிடம் அனுப்பி அவனுக்குச் சேரும்படி செய்து விட்டேன். அவன் கற்பகவல்லியை மணந்துகொண்டு அன்னிய தேசத்தில் சௌக்கியமாகவே இருப்பதாக நினைக்கிறேன்' என்று விவரமாகக் கூறினாள். அதையெல்லாம் மிகக் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்த செல்வநாதர், 'பெண்ணே! நீ கூறியதெல்லாம் பெரிய விநோதமாக இருக்கிறது. ஆயினும் இந்தச் சம்பாஷணையிலிருந்து உன்னிடம் உயர்ந்த குணங்கள் இருப்பதை யறிந்து சந்தோஷப் படுகிறேன். உங்கள் இருவரைப் பற்றியும் பல மர்மங்கள் இருப்பதாக எனக்குத் தோன்றுவதால் இன்னும் பல கேள்விகள் கேட்கவேண்டி யிருக்கிறது. ஆனால் இப்போது நமது சம்பாஷணை நீடிக்கச் செய்ய எனக்குப் பிரியமில்லை' என்றார்.

அப்போது இந்திராபாய், 'பெரியாரே! நீங்கள் உங்கள் சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்வதில் எத்தகைய ஆட்சேபமும் இல்லை. உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம்;' என்றாள். அச்சமயத்தில் அவர்கள் இருந்த அவ்வறையின் கதவு திறக்கப்பட்டது.

வாயிற்படியில் ஒரு ஆள் வந்து நின்றான். அவன் முகத்தைக் கண்டதும் செல்வநாதர், 'யாரது? சபாபதியா?' என்று கேட்க, இந்திராபாய் அதிக ஆச்சர்யத்துடன், 'என்ன! அவனையும் நீர் அறிவீரா? இதென்ன எல்லாம் மர்மமாக இருக்கிறதே. செல்வநாதரே! உண்மையில் நீங்கள் யார்? எங்களை இவ்வாறு குழப்பத்தில் விடாமல் முழு விவரத்தையும் சொல்லிவிடுங்கள்' என்று பரபரப்புடன் பல கேள்விகளைக் கேட்டாள். அப்போது அவர் சபாபதியின் கையைப் பிடித்துக் கொண்டு, அதிக உணர்ச்சியை அடைந்தாரென்றாலும் அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு, 'சபாபதி பையனாக இருக்கும் போது நான் அவனைப் பார்த்திருக்கிறேன்' என்று கூறினார். அன்னியர் ஒருவர் தன்னைக் கண்டதும் இவ்வளவு அன்புடன் வரவேற்பதை சபாபதி விரும்பவில்லை யென்றாலும் அப்பெரியார் பலமுறை கோகிலத்தினால் சிறப்பித்துக் கூறப்பட்ட செல்வநாதரே என்பதை அறிந்ததும் அவருடன் நெருங்கிப் பழகுவதில் மிக்க சந்தோஷங் கொண்டான். அப்போது அவரும் அவனை ஆர்வத்துடன் சிறிது நேரம் நன்றாக உற்றுப் பார்த்து 'ஆம், நீ தான் தர்மலிங்கம் பிரபுவின் சொத்துக்கு உண்மையான பாத்தியதை யுடையவன் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை? என்றார். உடனே இந்திராபாயும், 'ஐயா, தாங்கள் சொல்வதில் சிறிதும் சந்தேகமில்லை. அதற்கு வேண்டிய ருஜுக்களை யெல்லாம் நாங்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம். சபாபதி தனது தாயாரின் படத்தையும் நன்கு அறிந்து கொண்டுவிட்டான் என்றாள்.

அப்பெரியார், 'ஆ, அப்படியா, சுகானந்தம் பிரபுவின் மனைவியாரான ரங்கநாயகியாரின் படம் இங்கே இருக்கிறதா?

அப்படியானுல் அதைக் காண்பி பார்க்கலாம்' என்று ஆர்வத் துடன் கேட்டார். உடனே இந்திராபாயும், 'இதோ இருக் கிறது' என்று கூறிக்கொண்டே அவள் பஞ்சநதம் பிரபுவின் வீட்டு நோட் புஸ்தகத்திலிருந்து கிழித்து வந்த அழகிய மாதின் படத்தைக் காண்பித்தாள். செல்வநாதர் அதைத் தன் கையில் வாங்கிக்கொண்டு ஜன்னலருகில் சென்று சொற்பநேரம் அதையே கூர்ந்து பார்த்தார். அப்போது அவ ரது முகம் அங்கிருந்த மற்றவர்களுக்குத் தெரியாமல் இருந் ததால் அவரது கண்களினின்றும் நீர் வடிந்தது அவர்களுக் குத் தெரியவில்லை. ஆனுல் அவர் திரும்பி அப்படத்தைக் கொடுத்தபோது அதன்மீது ஒரு சொட்டு ஜலம் விழுந்து அதனுல் அப்படம் நனைந்திருந்ததை இந்திராபாய் கண்டு கொண்டாள். இதனுல் செல்வநாதர் என்னும் அம்மனிதர் இந்த சம்பவங்களுடன் ஏதோ ஒருவகையில் அதிக நெருங் கிய சம்பந்தமுடையவர் என்பதை உணர்ந்தாள். அப்போது செல்வநாதர் சபாபதியைப் பார்த்து 'எனதன்புள்ள வாலிப சினேகிதனே உன்னுடன் முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றிப்பேச நான் இங்கே வந்தேன் வந்த இடத்தில் இந்திரா பாய், மோகனசுந்தரம் ஆகியவர்களின் மூலம் பல விஷயங் களை அறிந்துகொள்ள நேர்ந்ததற்காக மிகவும் சந்தோஷப் படுகிறேன். ஆனுல் அவைகளைப்பற்றியெல்லாம் விவரமாக இப்போது பேசவேண்டாம். இப்போது உன் விஷயத்தைப் பற்றி மட்டும் பேசுவோம். என்னை யாரோ ஒரு அன்னியன் என்று கருதவேண்டாம். நீ சிறுவனுக இருந்தபோது நான் உன்னை நன்ருக அறிவேன். ஆனுல் நீ என்னை அறிந்து கொள்ள முடியாது. நான் அவ்வளவு மாறுதல் உடையவ னுக இருக்கிறேன்' என்று துக்கக்குரலுடன் சொன்னுர்.

அப்போது இந்திராபாய் அப்பெரியாரிடம் நெருங்கி,

'ஐயா, பழைய விஷயங்களைப்பற்றி சபாபதியிடம் பேசினால் அவனுக்கு உணர்ச்சி மேலிட்டு அதனால் மயக்கத்தையும் பல ஹீனத்தையும் அடைகின்றான். தர்மலிங்கம்பிரபு செய்த மோசடிகளையெல்லாம் நன்கு ருஜுப்பிக்கக் கூடிய ஆதாரங்கள் பல என்னிடம் இருக்கின்றன. அடுத்த அறைக்கு வந்தால் அவைகளையெல்லாம் தனியாகப் பேசுவோம், என்றாள். செல்வநாதரும் அவளிஷ்டப்படியே அவளுடன் வேறொரு அறைக்குச் சென்றார். அங்கு சென்ற பிறகு இந்திராபாய் சபாபதிக்கு அவனுடைய சிற்றப்பனான தர்மலிங்கம் பிரபு இழைத்த கொடுமைகளை யெல்லாம் விவரமாகக் கூறினாள். அதை யெல்லாம் கேட்ட செல்வநாதர், 'ஆம், தர்மலிங்கம் பிரபு அயோக்கியன் என்பதை நான் முன்னமே அறிவேன். ஆனால் இவ்வளவு கொடுமையாக நடந்துகொள்வான் என்று நான் நினைத்ததேயில்லை. அப்படிப்பட்ட பாதகனுக்கு என்ன தண்டனை இருக்கப்போகிறது. இந்திராபாய்! நீ என் இவ் விஷயத்தில் நீதி கிடைக்கும்படி செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை' என்று கேட்டார். அதற்கவள் மிக்க வருத் தத்துடன், ஐயா, இவ்விஷயங்களை யெல்லாம் பகிரங்கத்துக் குக் கொண்டுவராமல் அந்தரங்கமாகவே முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய அவசிய மொன்றும் ஏற்பட்டிருக்கிறது. அதற் காகத்தான் அவசரப்படாமல் பக்குவ காலத்தை எதிர் பார்த் துக் கொண்டிருக்கிறேன்' என்றாள்.

அப்போது அப் பெரியார், 'அதென்ன? அப்படிப் பட்ட அவசியம்?' என்று கேட்க அவள், 'சபாபதியின் தாயாரும் சுகானந்தப் பிரபுவின் மனைவியுமான ரங்கநாயகியாரின் கற்பு விஷயத்தில் சில சந்தேகம் ஏற்படுகிறது. ஆதலால் அதை நான் பகிரங்கத்துக்குக் கொண்டுவர விரும்பவில்லை. இதை நான் சபாபதியிடமும் சொல்லவில்லை' என்ற

தும் செல்வநாதர், 'இந்திரா, நீ என்னிடமும் அதை மறைக்க முடியாது. எல்லா விஷயங்களையும் உள்ளது உள்ளபடியே கூறிவிடவேண்டும். நான் இன்று இவ்விஷயங்களை அதிகம் பேசவேண்டாமென்று நினைத்தேன். ஆயினும் நமது சம்பாஷணை அதிக தூரத்துக்கு இழுத்துக்கொண்டுபோய் விட்டது. இனி விஷயத்தைத் தெரிந்துகொள்ளாமல் இருக்க முடியவில்லை. ரங்கநாயகியாரின்மீது, நீ கொண்டுள்ள சந்தேகம் என்ன? அதைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?' என்று ஆவலோடு கேட்டார். அவர் அவ்வாறு கேள்விகள் கேட்பதற்குத் தகுந்த காரணங்கள் இருப்பதோடு அவருக்கு ஏதோ உரிமையும் இருக்கின்றன என்று இந்திராபாய் உணர்ந்ததால் அவரது கேள்விக்குப் பதில் சொல்லத் தொடங்கி, 'ஐயா, அந்த ரங்கநாயகி சீமாட்டி என் தாயாராக இருக்கவேண்டுமென்று நான் திடமாக நம்புகிறேன். ஆகவே அவ்வம்மையாரே மோகன சுந்தரத்துக்கும் தாயார் என்பதில் சந்தேகமில்லை' என்றதும் செல்வநாதர் இந்திராபாயை ஆச்சரியத்துடன் உற்று நோக்கினார். சிறிதுநேர யோசனைக்குப் பின்னர், 'ஆம், நீ கூறுவது வாஸ்தவந்தான். இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. ரங்கநாயகிச் சீமாட்டியின் நற்பெயருக்குப் பங்கம் வராதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியமே. நீ மிக்க புத்தி சாதுர்த்துடன் நடந்து வருகிறாய். அவளுடைய மைத்துனனைச் சரியானபடி தண்டிக்க வேண்டும் இது சம்பந்தமாய் இனி நீ எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையில் என்னையும் கலந்துகொள்வாய் என்று நம்புகிறேன்' என்றார்.

அதற்கு இந்திராபாய், 'ஐயா, தங்களைப்போன்ற அனுபவமும் ஆற்றலும் அறிவும் மிக்க பெரியாரின் துணை எனக்கு அகப்படுமாயின் அதைப் பெறுவதில் நான் சிறிதும் பின்

வாங்கமாட்டேன் என்பது மட்டும் நிச்சயம்' என்று உறுதி கூறினாள். அப்போது செல்வநாதர், 'பெண்ணே, கடைசியாக ஒரு வார்த்தை. உன் தாயார் யாராக இருக்க வேண்டுமென்பதை நீ யூகித்துவிட்டாய். அதுபோலவே உன் தந்தை யாராக இருக்கலாம் என்பதைக் கண்டு கொண்டாயோ' என்று கேட்டதும் இந்திராபாய் திடுக்கிட்டுப்போனாள். தன் தகப்பனார் இன்னாரென்று இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்பதை அவர் எப்படி அறிந்தார் என்று ஆச்சர்யப்பட்டாள். அவள் தந்தை யாராக இருக்கலாம் என்பது பற்றி எவரிடமுமே பிரஸ்தாபித்ததில்லை. அப்படியிருக்கும்போது செல்வநாதர் இதை அறிந்தது எவ்வாறு என்னும் ஆச்சர்யமேலிட்டது. ஆகவே இந்தச் செல்வநாதர் என்பவர் யாராக இருக்கலாம் என்று நினைக்க ஆரம்பித்தாள். தன்னுடைய மர்மங்களைப் பற்றிய விஷயம் தனக்குத் தெரிந்ததைவிட அவருக்கு அதிகமாகத் தெரிந்திருப்பது கண்டு பிரமையடைந்தாள். அவள் அவ்வாறு பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தபோது செல்வநாதர், 'பெண்ணே! உன் மனதில் தோன்றிக் கொண்டிருக்கும் சிந்தனைகளை நான் அறிகிறேன். ஆனால் இப்போது நீ என்னைக் கேள்வி கேட்க ஆரம்பிக்கக்கூடாது. பல அற்புத விஷயங்களைப் பற்றி நான் உனக்குச் சொல்லக்கூடிய வேளையும் விரைவில் வரும் உன் தந்தை யாராக இருக்கலாமென்பதை நீ யுகித்து அறிந்தாயா என்னும் கேள்வியை மீண்டும் கேட்கிறேன். பதில் சொல்' என்றார்.

அப்போது அவள், 'ஐயா, சொற்பநேரம் இருங்கள். இதோ வந்து விடுகிறேன்' என்று சொல்லிக்கொண்டே அடுத்த அறைக்கு ஓடிச் சென்று ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்து. 'இதைப் படித்துப் பாருங்கள் துளசிங்கம் பிரபு நாகபுரியில் பச்சையப்பரைச் சந்தித்ததும்

எனக்கு எழுதிய கடிதம்' என்று கூறினாள். அவர் அக்கடிதத்தைப் பிரித்துக்கொண்டே, 'நாகபுரியில் பச்சையப்பரா?' என்று சொல்லியவண்ணம் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்த விஷயத்தை முழுதும் படித்தார். சொற்பநேரம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்த பின்னர், 'சரி, இன்று இத்துடன் நிறுத்திக் கொள்வோம். உன்னிடத்திலிருந்து நான் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. உன்னுடையதும், உன் சகோதரனான மோகன சுந்தரத்தினுடையதும் பழைய விருத்தாந்தங்களை அறியவேண்டும். ஆனால் இப்போது வேண்டாம். அதைப்பற்றிப் பேசுவதை ஒத்திவைப்போம். இதற்குள் நீ என்னைப்பற்றி நன்றாக அறிந்து கொண்டுவிட்டால் எத்தகைய சந்தேகமு மில்லாமல் தாராளமாக எல்லா விஷயங்களையும் என்னிடம் கூற மனம் துணிவாய். நான் இன்னும் இரண்டொரு தினங்களில் உன்னைச் சந்திக்கிறேன். அதற்கிடையில் என்னைக் கேட்காமல் நீ எப்படிப்பட்ட நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவேண்டாம். நாம் இங்கிருந்து மற்றொரு அறைக்குப் போவதற்குள்ளாக இன்னொரு விஷயத்தையும் பேசிவிட வேண்டும். உனக்கு ஏதோ சிறிது பணமிருந்தாலும் மோகனத்துக்கும் சபாபதிக்கும் ஒன்றுமில்லையல்லவா? அதனால் செலவுக்குச் சமாளிப்பது கஷ்டமாக இருக்குமே, இங்கிபுட்டி, பேனா, கடுதாசி ஆகியவற்றைக் கொடு' என்றார்.

இந்திராபாயும் அவரது கட்டளையை மீற முடியாதவளாய் அவர் விரும்பியபடியே எழுதுவதற்கு வேண்டிய சாமான்களைக் கொடுத்ததும் அவர் மேஜையினருகில் உட்கார்ந்து ஒரு துண்டு காகிதத்தில் எதையோ எழுதினார். எழுதி முடித்ததும், 'பெண்ணே, நான் இங்குவந்து உங்களுடைய சினேகிதத்தைத் தேடிக்கொண்டதற்கு அறிகுறியாக

இதோ நான் கொடுப்பதை நீ எவ்வித தடையும் சொல்லாமல் பெற்றுக்கொள்' என்று கூறிக்கொண்டே அக்கடிதத்தை மேஜைமீது வைத்துவிட்டு அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறதென்பதை அப்போதே அவள் அறிந்துகொள்ள முடியாதபடி அவளை ஒரேபிடியாக மற்றொரு அறைக்கு அழைத்துக் கொண்டுபோய் விட்டார். அங்கேதான் மோகன சுந்தரமும் சபாபதியும் இருந்தார்கள். செல்வநாதர் சபாபதியைக் கண்டதும், 'தம்பி! இப்போது உன்னைப்பற்றிய விஷயங்களையெல்லாம் நான் தெரிந்துகொண்டேன். நீதான் சுகானந்தம் பிரபுவின் ஆஸ்திக்குரியவன் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. உன் தோற்றமே அதை ருஜுப்பிக்கிறது. நான் உனக்கு ஒரு நல்ல சினேகிதனாக இருப்பேன் என்பதை நீ விரைவில் காண்பாய்' என்றார். அதைக்கேட்ட சபாபதியும் அப்பெரியாரின் கையை மரியாதையுடனும் அன்புடனும் பிடித்து அழுத்தினன். அப்போது அவனது கண்களினின்றும் நீர் வடிந்தது.

அப்போது செல்வநாதர் வேடிக்கையாக, 'சபாபதி! நான் இப்போது இங்கிருந்து போகப்போகிறேனே. உனது காதலியாகிய கோகிலத்துக்கு ஒன்றும் சமாசாரமில்லையா? ஆ! அந்தப் பெயரைச் சொல்லும்போதே உன் முகத்தில் ஒருவித ஒளிவீசுகிறதே. அவளும் உனக்கு ஏற்ற பெண்தான். அவள் உன்னை நேசிக்க ஆரம்பித்து விட்டிருப்பாள். நாளையதினம் நான்வர முடியாவிட்டாலும் அவளிடமாவது ஒரு செய்தியைச் சொல்லி அனுப்புகிறேன். அதையேனும் சாக்காக வைத்துக்கொண்டு அவள் இங்கு வரட்டும்' என்று கூறிவிட்டு அவர் எல்லாரிடமும் விடைபெற்றுத் தம் வண்டியில் ஏறிக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுவிட்டார். அவர் சென்ற பின்னர் இந்திராபாய், மோகனசுந்தரம், சபாபதி

ஆகிய மூவரும், அப்பெரியார் எதையோ எழுதி மேஜை மீது வைத்துவிட்டுப்போன இடத்துக்குச் சென்று பார்த்ததில் செல்வநாதர் தம்முடைய பாங்கருக்கு, அதைக் கொண்டு வருபவரிடம் ஐயாயிரம் பவுன் கொடுக்கும்படி கூறியிருந்தார். அதைக்கண்டதும் அவர்களெல்லாம் மிக்க சந்தோஷமடைந்ததுடன் செல்வநாதர் யாராக இருக்கலாம் என்னும் விஷயத்தில் அவர்களுடைய சந்தேகம் இன்னும் அதிகமாயிற்று. இதில் ஏதோ ஆழ்ந்த மர்மமிருக்கிறதென்று அனைவரும் சிந்தித்தனர்.

—:():—

74-வது அத்தியாயம்

—:(o):—

சில யூகங்கள்

செல்வநாதர் மேற்கண்டவாறு இந்திராபாயைப் பார்த்துவிட்டுப்போன அன்றுமாலை மூன்று மணி சுமாருக்கு இரத்தினபுரியில் பிரபுக்கள் வசிக்கும் பிரதேசத்தில் பஞ்சநதம்பிரபு தனது அறையில் உட்கார்ந்துகொண்டு தான் அரசாங்க தர்பாரில் இன்னும் பெரிய பதவியை அடைவதற்குரிய மார்க்கங்களையெல்லாம் யோசித்துக்கொண்டும் அது சம்பந்தமான ரிகார்டுகளைப் புரட்டிக்கொண்டும் இருந்தார். அவ்வேளையில் ஒரு சேவகன் அவர் முன் தோன்றி ஒரு விலாசமடங்கிய கடிதத்தை நீட்டி, 'ஐயா, இந்தக் கனவான் உங்களைக் காண விரும்புகிறார்' என்று தெரிவித்தான். பஞ்சநதம் பிரபுவும் அதைப் பார்த்து, 'ஓ, பச்சையப்பா? சரி, இருக்கட்டும். அவரை வரச்சொல்' என்று நிதானமா

கச் சொன்னார். சேவகன் வெளியே போய் பச்சையப்பரை அவ்வறையில் அனுப்பினான். பச்சையப்பரும் மிக்க ஆர்வத்துடன் சிரித்துக்கொண்டே பஞ்சநதம் பிரபுவின் எதிரில் வந்து நின்றான். ஆனால் பிரபுமட்டும் ஏதோ வேண்டா வெறுப்பாகவே அவனை வரவேற்றார். மேலும் ஒருவாறு சந்தேகத்துடன் பார்ப்பதுபோல் அவனைப் பார்த்தார். ஆகவே பச்சையப்பர், 'பிரபுவே, நாம் இருவரும் சந்தித்துப் பல வருஷங்களாய்விட்டன. ஆதலால்தான் நீங்கள் என்னை வேண்டா வெறுப்புடன் வரவேற்றீர் போலும்.' என்று கூறவும், அப்பிரபு 'வேண்டா வெறுப்பு ஒன்றுமில்லை. ஆயினும் நீ தான் பச்சையப்பரா என்று யோசித்து முடிவு செய்யக்கூடிய சாவகாசம் எனக்கு இல்லை. ஆகவே அவசரப்பட்டு ஒருவித முடிவுக்கும் வரக்கூடாதென்று அவ்வாறு பொதுவாக நடந்துகொண்டேன்' என்று அவர் தமது வழக்கப்படி கூறினார்.

அப்போது பச்சையப்பர் பொறுமையை இழந்தவனாய், 'பிரபுவே, என்ன தப்புந்தவறுமாகப் பேசுகிறீர். அந்த குயுக்தியும் தந்திரமும் என்னிடம் காண்பிக்க வேண்டாம். தாராளமாகப் பேசவாருங்கள். நான் சில முக்கிய விஷயங்களைப் பற்றிப் பேசவே வந்திருக்கிறேன்' என்றான். அப்போதும் அப்பிரபு, 'சரிதான். நீ சேவகனிடம் கொடுத்தனுப்பிய கடிதத்திலும் பச்சையப்பர் என்னைக் காண வந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்போதும் நீ உன்னை பச்சையப்பர் என்று சொல்லிக் கொள்கிறாய். இரண்டும் பொருத்தமாக இருப்பதால் நீ பச்சையப்பர் என்றே வைத்துக் கொள்வோம். அதற்கென்ன இப்போது?' என்று விவகாரம் பேசினார். அதைக்கேட்ட பச்சையப்பர் மீண்டும் ஆத்திரமடைந்து, 'நான்தான் பச்சையப்பர் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியுமே. அப்படி யிருக்கும்போது இப்படி யெல்லாம் விசித்திர

மாகப் பேசுவதன் காரணமென்ன? இந்தப் பதினறு வருஷங்களுக்குள் பிறர் என்னை அடையாளம் கண்டுகொள்ளக் கூடாதபடி அவ்வளவு மாறுதல் ஒன்றும் என்னிடம் ஏற்பட்டுவிடவில்லையே' என்ருன். அதற்கும் பஞ்சநதம்பிரபு, 'ஆளின் தோற்றத்தைக் கொண்டே எதையும் நிச்சயிப்பது கூடாது. எனினும் நீதான் பச்சையப்பர் என்று வைத்துக்கொள்வோம் என்று நான் சொல்கிறேன்' என்று கூறவும் அவன், 'ஏன், அப்படி? நான்தான் இரங்கநாயகிச் சீமாட்டியின் சகோதரனுகிய பச்சையப்பர் என்பதையும், என்னுடன்தான் நீங்களும் தர்மலிங்கம் பிரபுவும் பல வருஷங்களுக்கு முன்னர் ஒரு காரியத்தைச் செய்தீர்கள் என்பதையும் விரைவில் ருஜுப்பிக்கிறேன்' என்று கூறினன்.

அப்போது பஞ்சநதம்பிரபு, 'போதும், போதும். நிறுத்து உன் பேச்சை' என்று கூறிக்கொண்டே நான்கு புறமும் ஆவலுடன் சுற்றிப் பார்த்ததுடன் அவ்வறையின் கதவையும் திறந்து பின் பக்கத்திலிருந்து யாரேனும் கவனிக்கிருர்களோ என்று பார்த்து யாருமில்லையென்று தெரிந்துகொண்டு திருப்தியுடன் மறுபடியும் கதவை மூடிவிட்டுத் தன் ஆசனத்தில் அமர்ந்து, 'பச்சையப்பரே! நீ இப்போது இங்கு வந்த வேலைதான் என்ன' என்று கேட்க அவன், 'பிரபுவே ஒருயௌவன மாது ஒரு இரகசியத்தைக் கண்டுபிடித்திருக்கிருள் என்பது உங்களுக்குத் தெரியுமா?' என்று வினவினன். அப்போது பிரபு தன்னுடைய நிதானத்தையெல்லாம் இழந்து பரபரப்புடனும் என்றுமில்லாத சுறுசுறுப்புடனும், 'ஆ, என்ன மோகனசுந்தரத்தின் சகோதரி அல்லது துளசிங்கம்பிரபுவின் மனைவியைத்தானே நீ குறிப்பிடுகிருய்?' என்று கேட்டார். அதற்குப் பச்சையப்பர், 'ஆம்; அவளைத்தான் குறிப்பிடுகிறேன். அவள் இப்போது சந்திராபாய் என்னும் பெயரு

டன் விளங்குகிறாள் என்பது உங்களுக்குத் தெரியுமா?' என்றான். அதற்கு அவர், 'ஆம், நீ கூறுவது உண்மைதான். ஹேமவதி சீமாட்டியின் வீட்டில் வேலை செய்த மோகனசுந்தரம்; இந்திராபாய் தன்னுடைய சகோதரி என்று தெரிவித்ததாக ஹேமவதியும் மனமோகனரும் என்னிடம் சொன்னார்கள். ஆனால் அவள் சமாசாரம்' என்று ஏதோ சொல்லிமுடிப்பதற்குள் பச்சையப்பர், 'ஆம், அவள் சமாசாரத்தை நான் அறிவேன். அவள் ஆண்வேடம் தரித்து இராக்காலங்களில் பெரிய தனவந்தர்களைக் கொள்ளையடிக்கிறாளாம். தேவிதாசையும் மனமோகனரையும்கூட அவள் கொள்ளையடித்து விட்டு அது சம்பந்தமாக நாகபுரியில் நடந்த விவகாரத்தையும் நான் பத்திரிகையில் படித்தேன். ஆனால் நமது மோகனசுந்தரத்தின் சகோதரியே அவள் என்பது எனக்குத் தெரியவில்லை. அவளுடைய கணவன் துளசிங்கம்பிரபு ஹேமவதி சீமாட்டியின் இரண்டாவது புத்திரியான கற்பகவல்லியை மணந்து கொண்ட சங்கதி உங்களுக்குத்தெரியுமா?' என்று கேட்டான்.

அதற்குப் பஞ்சநதம்பிரபு, 'ஆம், நான் அதை அறிவேன். பல மாதங்களுக்கு முன்னரே அந்தத் துளசிங்கம் பிரபுவுக்கு ஒரு மனைவி இருக்கிறாள் என்பதை ஹேமவதி சீமாட்டியின் காதில் போட்டு வைத்தேன். ஆனால் அது எனக்கு எப்படித் தெரியும் என்பதை நான் சொல்லவில்லை. எப்படியோ கேள்விப் பட்டதாகத்தான் சொன்னேன்,' என்று கூறினார். அதற்குப் பச்சையப்பர், 'அது சரி. எப்படியோ துளசிங்கம்பிரபு கற்பகவல்லியை மணந்து கொண்டு விட்டான். அதை நான் தடுத்துவிட்டிருப்பேன். ஆனால் நாகபுரியில் அவர்கள் இருவரும் இருந்தபோது நான் அதில் குறுக்கிட்ட சமயம் துளசிங்கம்பிரபு என் காதில் ஒரு பெயரைச் சொன்னான். உடனே நான் சந்திராபாய் நம்முடைய

பழைய சமாசாரம் எதையோ கண்டுபிடித்து விட்டிருக்கிருள். அதனுல் நமக்கு அபாயம் வரலாம் என்று உணர்ந்தேன்' என்றதும் பிரபு, 'ஆ, அதென்ன சமாசாரம்!' என்று மிக்க கவலையுடன் கேட்டார். அதக்குப் பச்சையப்பர், 'நானென்ன சொல்வேன். என் காதில் ரங்கநாயகிச் சீமாட்டியின் பெயர் சொல்லப்பட்டது' என்ருன். உடனே பிரபு, 'ஆ, அப்படியா? அந்தமாதிரி நிலைமையும் ஏற்பட்டுவிட்டதா? நீ என்ன செய்தாய்?' என்று கேட்டார்.

அதற்குப் பச்சையப்பர், 'நான் என்னசெய்வது? அவள் எங்கு இருக்கிருள் என்பது எனக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் உடனே அவளைப் பிடித்து பைத்தியக்கார விடுதியிலாவது வேறு எந்தச் சிறையிலாவது அடைத்து வைத்துவிட்டிருப்பேன். அவசியமானுல் அவளை வேருெரு உலகத்துக்கும் அனுப்பிவிட்டிருப்பேன். ஆனுல் அவள் எங்கிருக்கிருள் என்று தெரியாமல் என்னதான் செய்வது. அவள் அடிக்கடி பணம் பெற்றுச் செல்லும் என் வக்கீலிடம் அவளது விலாசத்தை விசாரிக்கும்படி சொல்லி அனுப்பினேன். அவரும் அதைக் கண்டுபிடிப்பது சாத்தியமில்லையென்று சொல்லிவிட்டார். ஆனுல் நாபுரியில் வழக்கு நடந்த விவரங்கள் அடங்கிய பத்திரிகை இரண்டொரு வாரங்களுக்கு முன்னர்தான் எனக்குக் கிடைத்தது. அதிலிருந்து கொள்ளையடிக்கும் தொழிலையுடைய சந்திராபாயே நமது மோகனசுந்தரத்தின் சகோதரி என்றும் அவள் இரத்தினபுரிக்குச் சமீபத்தில் எங்கேயோ குடித்தனமிருக்கிருளென்றும் அறிந்துகொண்டேன். ஆகவே எதையும் உங்களுடன் கலந்து ஆலோசிப்போமென்று இவ்விடம் வந்தேன்' என்று கூறி முடித்தான். பஞ்சநதம் பிரபு அந்தப் பத்திரிகை அவனிடம் இருக்கிறதா என்று கேட்டு வாங்கி அதிலுள்ள விஷயங்களையும், சந்திராபாய் என்னும்

அப்பெண்ணைப்பற்றி வர்ணித்திருந்ததையும் அவர் நன்ருகப் படித்துப் பார்த்ததும், 'ஆ, அவள்தான், பச்சையப்பரே, அவள் சமீபத்தில் எனது வீட்டுக்கும் வந்திருந்தாள். அவளுடைய அடையாளத்தைக் கண்டுபிடிக்க என்னுல் முடியவில்லை. நான் கடைசி முறையாக மோகனசுந்தரத்தைப் பார்த்த போது அவளுடைய வயது பதினுறு இருக்கும். அப்போது அவளையும் பார்த்துவிட்டால் அவள் தன் ஆயுள் முழுவதிலும் என் ஞாபகத்தை வைத்துக்கொண்டு விடுவாள் என்னும் உத்தேசத்துடன் அவளைப் பார்க்கவில்லை. ஆதலால் அவள் ஞாபகம் எனக்கு இல்லாமற் போய்விட்டது' என்ருர்.

அப்போது பச்சையப்பர், 'அவள் என்ன உத்தேசத்துடன் இங்கே வந்தாள், என்று கேட்க, பஞ்சநதம் பிரபு, 'அவள் வந்த தினத்திலேயே சற்று நேரத்துக்கு முன்பு மோகனசுந்தரம் வந்து போய் இருந்தான். அவன் எப்படியோ ராஜதர்பார் அழகிகளின் படங்கள் நிரம்பிய புஸ்தகத்திலிருந்த ரங்கநாயகிச் சீமாட்டியின் படத்தைப் பார்த்துவிட்டான்' என்று சொல்லிக்கொண்டே திடீரென்று எழுந்து மற்ருெரு அறைக்குச் சென்று படங்களின் புஸ்தகத்தைக் காண்பித்து அதில் ஒருபக்கம் கிழிக்கப் பட்டிருப்பதையும் காண்பித்தார். அதைப் பார்த்த பச்சையப்பரும், 'ஆம், ஆம். அவர்கள் சரியான வழியிலேயே உளவு கண்டுபிடித்து வருகிருர்கள் என்பது நன்கு தெரிகிறதல்லவா? தங்கள் தாய் யார் என்று கண்டுபிடித்த அவர்கள் மற்ற எல்லாவற்றையும் எளிதில் கண்டுபிடித்து விடுவார்கள். பிற்பாடு எல்லா வண்டவாளங்களும் வெளிச்சமாய்விடும். ஆதலால் நாம் இப்போதே ஏதேனும் செய்யவேண்டாமா?' என்று கேட்டான். பிறகு இருவரும் நீண்டநேரம் யோசனைசெய்தார்கள். அவர்களுக்கு ஏதுவும் புலனுகவில்லை. கடைசியில் பச்சையப்பர், 'பிரபுவே,

நாம் இருவரும் அவள் வசிக்கும் மாளிகைக்குச் சமீபத்தில் பதுங்கி இருப்போம். அவள் ஏதேனும் வேலையாக வெளியே வரும்போது சுட்டுத் தள்ளிவிடுவோம். பிறகு ஏதேனும் புகார் வெளியானல் அவள் நம்மைக் கொள்ளையடிக்க வந்த தாகவும், அதனுல் சுட நேர்ந்ததாகவும் சொல்லிவிடலாம். உங்களுக்குச் செல்வமும் செல்வாக்கு மிருப்பதால் அதை எல்லோரும் ஆம் என்று நம்பிவிடுவார்கள். பிறகு நாம் மோகனசுந்தரத்தையும் சரிப்படுத்தி விடுவோம்' என்ருன். அதற்கு அவர் அதிக பீதியடைந்து, 'பச்சையப்பரே! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?' என்று கேட்க அவன் ஏதோ பதில் சொல்ல முயன்றபோது ஒரு சேவகன் அங்கு வந்து வெளியில் யாரோ ஒரு கனவான் வந்திருப்பதாகவும் அவர் பஞ்சநதம் பிரபுவைப் பார்க்க விரும்புவதாகவும் சொல்லி அவரது விலாசம் அடங்கிய கார்டை நீட்டினுன்.

அதைக்கண்ட பஞ்சநதம் பிரபு, 'செல்வநாதா! அது யார். அவர் இன்னவரென்று எனக்குத் தெரியாது. ஆயினும் பாதகமில்லை, அவரை உள்ளே அனுப்பு' என்று சொல்லிச் சேவகனை அனுப்பிவிட்டு பச்சையப்பரைப் பார்த்து நீ எனது பிரத்யேக அறையில் சற்றுநேரம் மறைந்து இரு. நான் அவருடன் பேசிவிட்டு அவரை அனுப்பிய பின்னர் உன்னைக் கூப்பிடுகிறேன்' என்று தெரிவித்தார். அதன்படியே பச்சையப்பரும் அருகிலுள்ள அறைக்குள் சென்ருன். அவன் சென்ற இரண்டொரு நிமிஷங்களுக்குள் செல்வநாதர் பஞ்சநதம் பிரபு இருந்த அறைக்குள் வந்து 'ஐயா, நான் பார்த்துப் பேசுவது பஞ்சநதம் பிரபுவைத்தானே.' என்று கேட்டதற்கு அப்பிரபு தன் வழக்கப்படி, 'இப்படிப்பட்ட விசித்திரமான கேள்விக்கு நான் பதில் சொல்ல வேண்டியதில்லை யென்றே நினைக்கிறேன். நான் பஞ்சநதம் பிரபுவாகவும் இருக்கலாம்.

என் நன்றாக ஆராய்ச்சி செய்து பார்த்தால் நான் பஞ்சநதம் பிரபுவே என்றும் உறுதி கூறுவேன்' என்றார். அவர் கொடுத்த பதிலைக் கண்டு செல்வநாதர் வெறுப்பும் ஆத்திரமும் அடைந்தார், எனினும் அதையெல்லாம் ஒருவாறு அடக்கிக் கொண்டு தான் வந்த காரியத்தைச் சாதித்துக்கொண்டுபோக வேண்டுமென்னும் எண்ணத்துடன், அங்கிருந்த ஒரு ஆசனத்தில் தான் அமர்ந்துகொண்டு, 'பிரபுவே நீங்கள் ஒரு ஆசனத்தில் உட்காரும். நான் உம்முடன் பல முக்கிய விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டியதாக இருக்கிறது' என்றார்.

அதற்குப் பஞ்சநதம் பிரபு, 'ஐயா, அப்படியே ஆகட்டும். ஆனல் நீங்கள் யாராய் இருந்தாலும் சரி. கேள்விகளுக்கெல்லாம் உடனுக்குடன் பதில் கொடுத்துவிட வேண்டாம். நன்ருக ஆராய்ந்து பார்த்தே பதில் சொல்லுங்கள்' என்று கூறவும், செல்வநாதர், 'கண்ணியமும் கௌரவமுமுள்ளவர்கள் எதையும் ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டியதில்லை. உண்மையைச் சொல்லிவிட வேண்டியதுதானே' என்றார். அப்போது பஞ்சநதம் பிரபு, 'ஓ, இப்போது நீர் பேசியதில் இருவித பொருள்கள் இருக்கின்றன. முதலாவது நீங்கள் கண்ணியவான் என்பதைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது. இரண்டாவது நான் கண்ணியமானவனே இல்லையோ என்னும் சந்தேகத்தைக் கிளப்பிவிடுகிறது' என்றதும் செல்வநாதர் 'ஐயா, அப்படிப்பட்ட உத்தேசத்துடன் எல்லாம் பேசவில்லை. நீராக இவ்வாறு வீண்பழி சுமத்துவது தவருகும். எனினும் இப்போது அப்படிப்பட்ட சிறிய சண்டைகளையெல்லாம் நடத்திக்கொண்டிருக்கச் சமயமில்லை. பிரபுவே! உம்மையே நீர் தூஷித்துக் கொள்ளும்படியான குற்றமொன்றையும் நீர் செய்யவில்லையா? யோசித்துப் பதில் கூறும்' என்று

திடீரென்று ஒரு கேள்விகேட்டார். இந்தக்கேள்வி பிரபுவின் மூளையைக் கலக்கிவிட்டது. சிறிது நேரத்திற்கு முன்புதானே அவர் பச்சையப்பருடன் ஒரு தகாரான விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அந்த விஷயம் சம்பந்தமாகவே இப்போதும் கேள்வி கிளப்பப்பட்டதால் அவர் பீதியடைந்து விட்டார். ஆகவே அவரால் எவ்வித பதிலும் அளிக்க முடியவில்லை. அப்போது செல்வநாதர் மேலும் பேசத் தொடங்கி, 'ஐயா, பதினறு வருஷங்களுக்கு முன்பு ஒரு கனவான் உம்மை ஒரு உண்மையான சினேகிதன் என்று நம்பி' என்று சொல்லி முடிப்பதற்குள் பஞ்சநதம் பிரபு பிரக்ஞை இழந்தவராய், 'ஐயோ, பாவமே, செல்வநாதரே நீர் யார்?' என்று கேட்டார்.

அதற்குச் செல்வநாதர், 'ஐயா, நான் அந்தக் கனவானின் அந்தரங்க சினேகிதர். இப்போது ஏற்பட்டுப்போன குற்றங்களை யெல்லாம் களைந்து நியாயத்தைப் பிறப்பிக்கவே வந்துள்ளேன். உங்களுடைய விஷயங்களையெல்லாம் நான் விவரமாகத் தெரிந்துகொண்டு விட்டேன்' என்றதும் பஞ்சநதம் பிரபு, 'ஐயா, செல்வநாதரே! என் விஷயத்தில் காருண்யத்துடன் நடந்து கொள்ளுங்கள். நான் செய்த குற்றத்துக்கு எப்படிப்பட்ட பரிகாரமும் செய்யத் தயாராக இருக்கிறேன். அந்தக் கனவான் எங்கே இருக்கிறார். அவரது பெயரைச் சொல்லாமலிருந்ததற்காக மிகவும் சந்தோஷப் படுகிறேன்' என்றார். அப்போது எதிரில் இருந்த அறையின் கதவு சிறிது திறக்கப்படுவதும் மறுபடியும் மூடப்படுவதும் யாரோ உள்ளிருந்து உற்றுக் கேட்பதும்போல செல்வநாதருக்குத் தெரிந்ததால் அவர் உடனே எழுந்துபோய் அந்த அறையின்

கதவை நன்ருகத் திறந்து பார்த்தார். அங்கு பச்சையப்பர் இருப்பதை நன்ருகப் பார்த்து அவன் இன்னுனென்றும் அறிந்துகொண்டார். ஆயினும் தான் அதை அறிந்துகொண்டதைக் காட்டிக்கொள்ள விரும்பாமல் பஞ்சநதம் பிரபுவைப் பார்த்து, 'ஐயா, நமது சம்பாஷணையை உற்றுக் கேட்பதற்கும் ஒரு ஆளை ஏற்படுத்தியிருக்கிறீர் போலும். அந்த ஆள் யார்?' என்று கேட்டார். அப்போதும் பிரபுவினுல் ஒன்றும் பேச முடியாமற் போகவே பச்சையப்பர் தானுக வெளியே வந்து, 'ஐயா, நான்தான் பச்சையப்பர். நீர் செல்வநாதர் என்று தெரிந்துகொண்டேன். நீங்கள் இப்போது பேசிய ஒரு பேச்சினுல் நானும் அதில் சம்பந்தப்பட்டிருக்கிறேன் என்று தெரிவதால் உங்களுடைய சம்பாஷணையில் நானும் கலந்து கொள்ளலாமென நினைக்கிறேன்' என்ருன். அதற்குச் செல்வநாதர் அதிக கடுமையாக, 'கட்டாயம் கலந்துகொள்ளலாம். நீ பச்சையப்பராக இருக்கும் பட்சத்தில் பஞ்சநதம் பிரபுவுக்கு இதில் எவ்வளவு சம்பந்தமிருக்கிறதோ அவ்வளவு சம்பந்தம் உனக்கும் இருக்கிறது. நீ பக்கத்து அறையிலிருந்து எல்லாம் கேட்டுக்கொண்டிருந்தபடியால் பிரபுவினிடம் கூறிய விஷயங்களை யெல்லாம் மறுபடியும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லையென நினைக்கிறேன். ஒரு கனவானின் நண்பன் என்னும் முறையில் உங்களிருவரிடமுமாகச் சேர்ந்து ஒப்புவிக்கப்பட்ட ஒரு லட்சம் பவுனுக்கு நீங்கள் கணக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்கிறேன். அத்தொகை மோகனசுந்தரம், அவனுடைய சகோதரி ஆகியவர்களுடைய நன்மைக்காக உங்களிடம் சேர்ப்பிக்கப்பட்டதல்லவா?' என்று கேட்டார்.

அதற்குப் பச்சையப்பர், 'ஐயா, இத்தொகை சம்பந்தமான விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று யாரே

னும் அக்கரையுடன் இருக்கிறார்களோ?' என்று கேட்க' செல்வநாதர், 'ஏன், அதில் சந்தேகமென்ன? அப்படி அக் கரையுடன் இருக்கமாட்டார்களென்று நீ நினைக்கிறாயோ?' என்று கேட்டார். பச்சையப்பர், 'அப்படியொன்றுமில்லை. கணக்கு கேட்பதற்குப் பாத்தியமுடையவர்களுக்கு அக்கரை இல்லாமற் போகுமா? எப்படியாயினும் அந்தக் கனவானின் அந்தரங்க நண்பர் என்னும் முறையில் நீர் மோகனசுந்தரத் தையும் அவனுடைய சகோதரியையும் சந்தித்தீரா?' என்று கேட்டான். அதற்குச் செல்வநாதர், 'ஆம், அவர்களைப் பார்த்தேன். அவர்கள் இருவருடனும் சுமார் ஒருமணிநேரத் துக்கு முன்புதான் சாவகாசமாகப் பேசினேன். அவர்க ளுக்கு அபாண்டமான தவறு இழைக்கப் பட்டிருக்கிறது. அதை அவர்களே அறியமாட்டார்கள். ஐயோ பாவம். இப்ப டியும் அனியாயம் செய்யலாமா?' என்று கேட்டார். அப் போது பச்சையப்பர், 'ஐயா, அது கிடக்கட்டும். அப்பெண் ணினுடன் பேசியதாகச் சொன்னீர்களே, அவள் இப்பால் செய்துவரும் தொழிலைப்பற்றி உம்மிடம் ஏதேனும் கூறி னாளா?' என்று பரிகாசமான முறையில் கேட்டான். அப் போது செல்வநாதர் அதிக கோபத்துடன், 'நீ என்ன உளறு கிறாய். அவள் யோக்கியமானவள் என்று நம்புவதற்கு' என்று எதோ சொல்லி முடிப்பதற்குள் பச்சையப்பர், 'ருஜு வில்லாமல் எதையும் நம்பிவிடுவதில் என்ன பிரயோஜனம் இதோ இந்தப் பத்திரிகைத் துண்டைப் படித்துப் பாருங்கள். எல்லா விவரமும் விளங்கிவிடும்' என்று சொல்லி சந்திராபாய் கொள்ளையடித்த வழக்கு விசாரணையைப் பற்றிய விவரமடங் கிய பத்திரிகைத் துண்டைக் கொடுத்தான்.

அதை அவர் படித்துக்கொண்டு வரும்போதே சந்திரா பாய் என்னும் அப்பெண்மணி கொள்ளையடிக்கும் தொழிலில்

இறங்கியிருக்கிறாள் என்று ருஜுவாவதையறிந்து அதிக பீதியடையவே அவரது முகம் வெளுத்தது. இதை யெல்லாம் அவரது முகக்குறியால் பச்சையப்பர் அறிந்து கொண்டதால் தான் ஜெயித்துவிடப் போவதால் பெருமையடைந்தான். செல்வநாதர் அச்செய்தியை மறைத்து அவ்வாறு இருக்கமுடியாதென்று கூறிவிடலாமென முதலில் நினைத்தார். ஆயினும் கோகிலமே தன்னை சந்திராபாய் விடுவிக்க வந்தபோது சமுத்திரவிலாச மாளிகைக்கு ஆண் வேடம் தாங்கிக் குதிரையின் மீது பல ஆயுதங்களுடன் வந்ததாகச் சொன்னது ஞாபகத்துக்கு வந்தாலும், அப்பத்திரிகையில் அப்பெண்ணின் அடையாளங்கள் வருணிக்கப் பட்டிருப்பது எல்லாவிதத்திலும் சந்திராபாய்க்குப் பொருத்தமாகவே இருந்ததாலும் செல்வநாதர் ஒன்றும் பேசமுடியாமல் திகைப்படைந்தார். மேலும் அவளே தன்னிடம், அவள் பெண் என்னும் முறையில் எத்தகைய தவறும் இழைத்துவிட்டாலும் தனது வாழ்க்கையில் களங்கமில்லாமலில்லை என்று சொன்னதும் ஞாபகத்துக்கு வந்தது. ஆகவே அவள் கொள்ளைத் தொழிலில் ஈடுபட்டிருக்கவேண்டும் என்று நம்பினார். சிறிது நேரம் யோசித்துப் பார்த்தார். அப்போது அவர் திகைப்புற்றிருப்பதைக்கண்ட பச்சையப்பர், 'ஐயா, நீர் உம்முடைய நண்பராகிய அந்தக் குறிப்பிட்ட கனவானிடம் என்ன சொல்லப் போகிறீர்? இது பயங்கரமான செய்தியாக இல்லையா? என்று கேட்டான்.

அப்போது செல்வநாதர் அதிக ஆத்திரமடைந்து கோபத்துடன், 'அயோக்கியப் பையலே! அதிகம் பேசவேண்டும். இதற்கெல்லாம் நீயும், இந்தப் பஞ்சநதம் பிரபுவும்தான் காரணம். நீங்கள் ஒழுங்காக நடந்துகொண்டு அவளுக்கு வறுமையே இன்னதென்பது தெரியாதபடி வைத்திருந்தால் அந்த நிலைமை ஏற்படுமா? ஆகவே இதற்கெல்லாம் நீங்கள்

தான் பதில் சொல்லவேண்டும். இதற்காக உங்களைத் தண்டிக்க ஏற்பாடு செய்வேனென்பது நிச்சயம்.' என்று கூறிக்கொண்டே ஆத்திரத்துடன் அவ்விடத்தை விட்டுச் செல்ல முயன்றபோது பச்சையப்பர், 'ஐயா, அவசரப்பட வேண்டாம். ரங்கநாயகிச் சீமாட்டியின் கற்பு பங்கப்பட்டிருக்கலாம். ஆதலால் எதையும் யோசித்துச் செய்யுங்கள்' என்றான். அச்சொல் அவர் காதில் விழுந்ததும் அவர் திடுக்கிட்டுப்போனார். அவசரப்படுவதில் பிரயோசனமில்லை யென்று அறிந்தார். ஆகவே ஏதோ சிந்தனையுடன் நாற்காலியில் சாய்ந்தார். சிறிது நேரத்திற்குப் பின்னர், செல்வநாதர், 'ஓ, நான் இதுவரை எப்போதும் காணாத அவ்வளவு அதிகமான அயோக்கியத்தன்மை யுடையவர்களுடன் விவகாரம் நடத்த வேண்டியிருக்கிறது. பச்சையப்பரே! நீ சொன்னபடி இதில் சிறிது நிதானமாகவும் நடந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது. ரங்கநாயகிச் சீமாட்டியின் பெயருக்குப் பங்கம் ஏற்படாதபடியும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டுமல்லவா? எனினும் உங்கள் இருவருக்கும் வேறுவிதமான தண்டனையாவது கட்டாயம் கிடைக்கும். ஆகவே அயோக்கியத்தனமாகச் சம்பாதித்த கொள்ளையை அனுபவிப்பதற்கு உங்களை விட்டுவிடுகிறேன். ஆனால் என்றைக்காயினும் நீங்கள் அதற்காக வருந்தவேண்டிய காலம் வாராமற் போகாது. உங்களுடைய அயோக்கியச் செயலுக்காக இறைவன் உங்களைத் தண்டிக்காமல் விடான்,' என்று ஆத்திரத்துடனும் பரபரப்புடனும் கூறிக்கொண்டே அவ்விடத்தைவிட்டுச் சென்றார்.

அவர் அங்கிருந்து போனபிறகு பச்சையப்பர் மிக்க சந்தோஷத்துடன் பஞ்சநதம் பிரபுவினிடம், 'பார்த்தீரா! நான் செய்த தந்திரத்தை. இப்போது என் மனம் மிக்க நிம்மதியை அடைந்துவிட்டது. சமீப காலமாக நான் மிகவும் கஷ்டப்

பட்டுக் கொண்டிருந்தேன். அக்கஷ்டம் இப்போது தொலைந்தது.? என்று கூறிக்கொண்டே சந்தோஷக் கூத்தாடினான். பஞ்சநதம் பிரபுவும் சிறிது சுதந்தரத்தை யடைந்தவன்போல் திருப்தியுடன், 'ஆம்; இந்த விஷயம் நாம் எதிர்பாராத வகையில் ஒருவிதமாகத் திருப்தியுடனேயே முடிந்து விட்டது. எனக்கும் சந்தோஷத்தையே தருகிறது' என்றார். அப்போது பச்சையப்பர், 'நான் பக்கத்திலுள்ள அறையில் இருந்தபோது திடீரென்று எனக்கு ஒரு எண்ணம் உண்டாயிற்று. அதாவது உம்முடன் பேசவந்தவரும் நாம் சற்று நேரத்திற்குமுன் பேசிக்கொண்டிருந்த விஷயமாகத்தான் வந்திருக்க வேண்டுமென்பதே. ஆகவே எப்படியாவது இருக்கட்டுமென உங்கள் சம்பாஷணையை உற்றுக் கேட்டேன். நான் சமயத்துக்கு வந்திராவிட்டால் அந்தக் கிழவன் உம்மை ஏமாற்றி வாயில் போட்டுக்கொண்டு விட்டிருப்பான். நான் அவனை ஒரேயடியாக வாயை மூடிக்கொள்ளும்படி செய்துவிட்டேன்' என்று பெருமை சொல்லிக் கொண்டான். அதற்குப் பஞ்சநதம்பிரபு 'ஆம், இப்போது நாம் இத்தொல்லையினின்றும் விடுபட்டுவிட்டோம். அதுவரையில் சந்தோஷமே. ஆனால் இனி இந்த விவகாரமே வெளிவராது என்று நினைக்க இடமிருக்கிறதா?' என்று கேட்க, பச்சையப்பர், 'வராதென்றுதான் நான் நம்புகிறேன். ரங்கநாயகிச் சீமாட்டியின் பெயரையும், சந்திராபாயின் தொழிலையும் செல்வநாதர் என்னும் இக்கிழவன் காப்பாற்றவேண்டி யிருப்பதால் இது இனி வெளிவருவதற்கு வழியில்லை. நான் என் வக்கீலினிடம் இப்போது சந்திராபாய்க்குக் கொடுத்துவரும் அலவன்ஸையும் கொடுக்க வேண்டாமெனக் கூறிவிடுகிறேன். நான் இரத்தினபுரிக்கு இப்போது வந்தது நல்லதாகவே முடிந்தது' என்றான்.

அதற்குப் பஞ்சநதம் பிரபு, 'எல்லாம் சரிதான். இந்த

செல்வநாதர் என்பது யாராக இருக்கலாம்' என்று கேட்க, பச்சையப்பர், 'அவன் யாராயிருந்தால் நமக்கென்ன? இனி நாம் அவனைக்கண்டு பயப்படவேண்டிய அவசியமே இல்லாமற் போய்விட்டது! என்று சொல்லிவிட்டுப் பஞ்சநதம்பிரபுவினிடம் அனுமதி பெற்று அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டான். தான் தனது முயற்சியில் ஜெயித்து விட்டதாக எண்ணி இறுமாப்புடன் சென்றான்.

—:(o):—

75 வது அத்தியாயம்

பிரபுவும் வக்கீலும்

பச்சையப்பர் பிரபுவைப் பிரிந்த அரைமணி நேரத்துக்குப் பின்னர் பஞ்சநதம் பிரபுவைக் காண்பதற்காகப் பிரபல வக்கீலான தேவிதாசர் வந்தார். தேவிதாசரும் மனமோகனரும் பிரபல கூட்டுவக்கீல்கள் என்பது நேயர்களுக்குத் தெரிந்ததே. மனமோகனரும் பஞ்சநதம் பிரபுவும் ஹேமவதி சீமாட்டியின் சொத்துக்கு டிரஸ்டிகள். மனமோகனரைப் போல் தேவிதாசர் அவ்வளவு புத்தி கூர்மை வாய்ந்தவரல்லவென்றாலும் மிக்க நிதானஸ்தர். யோக்கியப் பொறுப்புடையவர். அவரைக் கண்டதும் பஞ்சநதம்பிரபு, 'தேவிதாசரே ஏது விசேஷம். இந்நேரத்தில் இப்படி வந்துவிட்டீர்கள். தினகரம் பிரபுவினால் ஏதேனும் தகராறு ஏற்பட்டு விட்டதோ?' என்று பரிவுடன் விசாரித்தார். அதற்குத் தேவிதாசர், 'அப்படியொன்றுமில்லை. அம்முறை நான் ஹேமவதி சீமாட்டி சம்பந்தமான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசவேண் வ

திருக்கிறேன். நீங்கள் அந்தக் குடும்பத்தின் நீண்டகால நண்பராக இருப்பதால் அதைப்பற்றி உங்களிடம் கலந்து ஆலோசிப்பது அவசியமென்று எங்களுக்குத் தோன்றியது' என்றூர். அதைக் கேட்ட பஞ்சநதம் பிரபு என்ன விஷயமாக இருக்குமோ என்று பீதியடைந்து, 'என்ன விசேஷம், சீமாட்டியைப்பற்றிய சங்கதி என்ன?' என்று வினவினூர். தேவிதாசர், 'அது ஒரு ஆபாசமான விஷயம். மோகனதாஸ் என்பவனைப்பற்றி நீர் கேள்விப்பட்டிருக்கலா மல்லவா?' என்றூர். அப்போது பஞ்சநதம் பிரபு, 'ஏன் அவனைப்பற்றி நான் கேள்விப் பட்டிருப்பது மட்டுமல்ல. நேரிலேயே பார்த்துமிருக்கிறேன். ஹேமவதி சீமாட்டியின் பெண்களுக்குச் சித்திரம், சங்கிதம் முதலிய கலைகளைக் கற்றுக்கொடுத்து வந்தான்' என்றதும் தேவிதாசர், 'அது சரிதான். அவன் சீமாட்டியினிடம் ஏதோ தவருக நடந்து கொண்டதாக ஒரு புகார் கிளம்பியிருக்கிறதே அதைப்பற்றி உமக்கு ஏதேனும் தெரியுமா?' என்று கேட்க, பஞ்சநதம் பிரபு, 'ஐயா, நான் எதற்கும் நிதானமாக ஆராய்ந்துதான் பதில் சொல்வது வழக்கம். ஆயினும் இவ்விஷயத்தில் நிதானிக்கவேண்டிய அவசியமே இல்லை. அப்படிப்பட்ட புகார் ஒன்றைக் கேள்விப்பட்டிருக்கிறேன்' என்று கூறியதும் தேவிதாசர், 'ஐயா, இதைப் பற்றிப் பேசவே நான் இங்கு வந்திருக்கிறேன். மோகனதாஸ் என்பவன் அந்தப் புகாரை மறுக்கின்றூன். அதை வேறு விதமாக மாற்றிக் கூறுகிருன். ஒரு கனவான் அவன் விஷயத்தில் அனுதாபங்கொண்டு அவனுக்காக வேலை செய்ய முன் வந்திருக்கிருர். அவர் சீமாட்டியின்மீது மான நஷ்ட வழக்குத் தொடர ஏற்பாடு செய்து வருகிருர்.' என்று கூறினூர்.

அதைக்கேட்ட பஞ்சநதம் பிரபு, 'அப்படி அவனுக்காக

வேலை செய்து வரும் கனவானின் பெயர் என்ன' ஞாபகப் பிசகாக ஒன்றுக்கு ஒன்ருகச் சொல்லிவிட வேண்டாம். கோபாலன் என்பதற்கு கோவிந்தன் என்று தவருகப் பெயர்களைச் சொல்லிவிடும் ஆட்களும் எனக்குத் தெரியும். நீ சரியாக ஞாபகப் படுத்திக்கொண்டு சொல்' என்று கேட்டார். அப்போது தேவிதாசர் சிரித்துக்கொண்டே, 'சிந்தித்து ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டிய அவசிய மொன்றுமில்லை. அவரது பெயர் செல்வநாதர் என்பது நன்ருக ஞாபகத்திலிருக்கிறது' என்று கூறவும், 'ஆ, செல்வநாதரா?' என்று திக்பிரமையுடன் கூறினர். அதைக் கண்ட தேவிதாசர் ஆச்சர்யத்துடன் 'செல்வநாதர் உமக்குத் தெரியுமா?' என்று கேட்க, அப்பிரபு, 'எனக்குத் தெரிந்தவர் எனக் கூறிக்கொள்ள முடியாதென்ருலும் அவர் சுமார் ஒருமணி நேரத்துக்குமுன் இங்கு வந்திருந்தார் என்பது மட்டும் நிச்சயமாகத் தெரியும்' என்ருர். அதற்கு அந்த வக்கீல், 'அப்படியானல் அவர் இதைப்பற்றி ஒன்றும் பிரஸ்தாபிக்கவில்லையா? நீர் ஹேமவதி சீமாட்டியின் குடும்ப சிநேகிதர் என்பது அவருக்கும் தெரிந்திருக்கவேண்டுமே' என்று கேட்க அப்பிரபு, 'அவர் பேசியதிலிருந்து நான் சீமாட்டியின் குடும்பநண்பன் என்பதை அவர் அறிந்து கொண்டிருப்பதாகச் சொல்ல முடியவில்லை. அவர் வேறு ஏதோ ஒரு ஒரு விஷயமாகப் பேச வந்திருந்தார்' என்ருர்.

அப்போது தேவிதாசர், 'அப்படியானல் நான் வந்த விவரத்தைச் சொல்கிறேன் கேளுங்கள். செல்வநாதர் இரண்டு மூன்று முறை எங்களிடம் வந்து ஹேமவதி சீமாட்டி ஒரு பொய்யான புகாரை மோகனதாஸின்மீது கிளப்பி விட்டிருப்பதாயும், அதற்குத் தக்க சமாதானம் சொல்லாவிட்டால் மானநஷ்ட வழக்கு தொடங்கப்போவதாகவும் தெரிவித்தார்.

186576

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரிமீ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட **"அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கோலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி ரகசியம் 3-ம், 4-ம், 5-ம், 6-ம், 7-ம் பாகம்** நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது **இரத்தினபுரிரகசியம் 8-ம்பாகம்** என்றநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி	ரூபா 1	0
7-பாகமும் ...	13	14	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும்...	3	0	ரத்தினாபாய் ...	1	18
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	10
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	2
கனகபூஷணம்2பாகம்...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	12
ஆனந்தஸிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.